# திராவிடநாடு

11—1—59 | வார வெளியீடு | விலை 16 காசு


## சூளுரைப்போம்!

பாரதத் தாயின் மக்கள்
    பாரினில் யாமே என்று
ஊரதைக் கூட்டி வீணில்
    உறுமிடும் தமிழா கேட்பாய்!
காரது கண்டா லன்றி
    கழனிகள் விளையா தப்பா!
யாரெது கூறிட் டாலும்
    எண்ணமி ருத்திப் பார்ப்பாய்!

நாட்டிலே செல்வங் காண
    நல்வழி பலவும் உண்டு
காட்டிலே கரியும் தேக்கும்
    கணிப்பரு மலையும் நீரும்
ஏட்டிலே சுரையாய் இங்கு
    இருந்திடும் கொடுமை ஏனோ?
வீட்டிலே வறுமை மிஞ்ச
    வேதனை படர்தல் ஏனோ?

நந்தமிழ் நாட்டோர் மட்டும்
    நாடுவிட் டிலங்கை பர்மா
சொந்தமாகக் கொண்டார் வாழ!
    சூதுகள் அறியா நம்மை
விந்தியம் தாண்டி வந்த
    வியாபாரி யாம் சேட்டு
தந்திரம் புரிந்து(ஏ) மாற்றித்
    தனத்தொடு வாழ்தல் பாராய்!

அறிவியல் அறிஞ ருண்டு
    அணைத்திடுங் கரங்களில்லை!
பொறியியல் வல்லோர் தம்மைப்
    புரிந்துமே புகழ்வோ ரில்லை!
துறவியர் பொய்க்கோ லத்தைத்
    துதிப்பவர் இன்று உண்டு!
மறக்குல மக்கள் இங்கே
    வாழ்ந்திட வழிதானில்லை!

தெள்ளிதின் தெளிந்த தேனும்
    செந்தமிழ் விளைநி லத்தில்
கொள்ளியின் கொடுமை சேரும்
    குறைமொழி குதித்தல் கண்டும்
அள்ளியே அணைத்து அஃதை
    ஆதரிப் பாரைக் கண்டு
உள்ளமோ அலறும், ஆனால்
    உரைத்திட நாதான் இல்லை!

புவிபெறும் எதையும் ஏற்றுப்
    பொருளொடு புதுமை வார்த்து
நவில்தொறும் நாவில் உள்ளில்
    நாளெலாம் நிலவி நிற்கச்
சுவைபெறத் தமிழில் பாடித்
    தரித்திர ராக வாழும்
கவிக்குலம் இன்றும் உண்டு
    கனிவுடன் பார்ப்போ ரில்லை!

ஏனடா தமிழா இந்த
    இழிநிலை நமக்கு இன்று?
மானிட ராக நாமும்
    வாழ்ந்திடற் கென்ன இல்லை?
வானிலே பறவைக் கூட்டம்
    மகிழ்வுடன் ஒன்றாய்க் கூடித்
தானுலா வந்திட் டாலும்
    தங்குதல் தனியா யன்றோ!

திருவிடம் தனியாய்க் கண்டே
    செழுமிய வாழ்வு பெறுவோம்!
பொருமையைச் சார்ந்து நிற்போம்!
    பிறங்கிடும் தமிழாய் வாழ்வோம்!
ஒருமன மாக எங்கள்
    உயர்தமிழ்த் திருநா டென்று
திருவிட நாட்டை மீட்கத்
    திடமுடன் சூளு ரைப்போம்!!

—நாஞ்சில் அ. ஆரிது.

# இலக்கிய உலகில்...(3)

வித்துவான். இரா. சொக்கலிங்கம்

இலக்கியமானது கற்பனை கனவு இவைகளின் விரிவுரையேயானாலும், அது ஒருவகையில் சமுதாய வாழ்க்கையின் வரலாருகவும் விளங்குகின்றது. இக்கருத்துப் பற்றியே இலக்கியத்தைக் காலக் கண்ணாடி என்பர். கண்ணாடியிலும் இருவகையுண்டு. சாதாரணக் கண்ணாடி தனக்கு அப்பாலுள்ள பொருளைக் காண்பிக்கும். இரசம் பூசப்பெற்ற கண்ணாடி தனக்கு அப்பாலுள்ள பொருளைக் காட்டாமல் தன்னைக் காண்போரின் வடிவத்தையே பிரதிபலித்துக் காட்டும். அதுபோலவே, தான் தோன்றிய காலத்து வாழ்க்கைநிலைகளைக் காட்டி அமையும் பொழுதுபோக்கு இலக்கியங்களும்உண்டு. தம்மைக் காண்போர் காலத்துச் சிக்கல்களையே தாமும் பிரதிபலித்துத் தெளிவூட்டும் இலக்கியங்களும் உண்டு.

இலக்கியத்தை மொழி—இனவுணர்வுகளுடன் பயின்று புதிய கருத்துக்களையும் மறுமலர்ச்சியையும் காண விழைவோர் நலிவடைந்தபகுதிகளைக் கண்டெடுத்தும் பாராது விடுத்துச் செல்வது இயல்பே. சில பேராசிரியர்கள் சங்க இலக்கியக் கடலில் மூழ்கித் திளைத்து முத்தெடுக்கும் அளவிற்கு, இடைக்கால பிற்கால இலக்கியங்களில் திளைப்பதாகத் தெரியவில்லை. அப்படியே திளைத்தாலும் உயர்ந்த உண்மைகள் பொதிந்துள்ள பாடல்களோடு நின்று விடுகின்றனர். பாரதம், இராமாயணம் போன்ற இலக்கியங்களில் தம்மை மறந்து ஈடுபட்டுத் துதிபாடும் அளவிற்கும் சென்று விடுகின்றனர்.

ஆனால் இவர்கட்கு மாருக, ஒரு பயனும் தராத புராண-சமய இலக்கியங்களில் மட்டுமேதிளைப்போரும் இருக்கத்தான் செய்கின்றனர்; திளைப்பதோடு மட்டும் அமைவதில்லை. இலக்கியம் பற்றிப் பேச நேரும்போதெல்லாம்இவற்றையே போற்றிப் புகழ்பாடிவிட்டு அமைதி அடைவர்! இது அவரவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்பைப் பொறுத்தவிடயமாயினும், இத்தகையோரால் இலக்கியத்துறை வளம் அடைவதற்கு வழியில்லை.

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் புராண — சமயக் கூறுபாடுகள் மிக அதிக அளவில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பது உண்மையே. உலகில் வேறு எமமொழியும் இவ்வளவிற்கு சமய—புராண நூல்களால் நிரம்பியுள்ளதா என்பது ஐயத்திற்குரியதே. இதைக்கண்டுதான் கவிஞர்

'தமிழ் மொழியை மதங்களிலே
சாய்க்காமை வேண்டும்'

என்று பாடினர் போலும்.

அண்மைக் காலத்தில் தமிழகத்தில் இலக்கியத்தில் புலமை பெறுவோரும் அத்துறையைப் பல்வேறு நோக்குடன் அணுகுவோரும் பல்கி வருகின்றனர். இதற்கு இரண்டு தலையாய காரணங்களைக் கூறலாம். ஒன்று, பொது மக்களின் கவனம் இலக்கியத்துறையில் அதிகம் திரும்பியுள்ளமை; மற்ருென்று, பல்வேறு அரசியல் இயக்கங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள, இனவழிப்பட்ட தேசிய உணர்ச்சி. இந்தநல்ல சூழ்நிலையில் இலக்கியத்தை முறையாகப் பயின்று புலமைபெற்ருேரும் தன் முயற்சியால் தன் மொழியிலுள்ள இலக்கியங்களைப் புரிந்துகொண்டு அவற்றை அணுகுவோரும் சாதிக்கக்கூடிய — சாதிக்கவேண்டிய பல நற்றொண்டுகள் உள. இலக்கியத்துறையைப்பொதுமக்களுடன் அதிகப்பிணிப்புண்டாக்கி வைத்தல், மொழியுணர்ச்சியூட்டுதல், மனமாற்றத்தின் மூலம் நல்லது செய்யத் தூண்டுதல்—உரிமையுணர்வூட்டுதல்முதலியன அத்தொண்டுகளில் குறிப்பிடத்தக்கனவாம்.

இந்நிலையில் இவ்விரு சாராரிடமும் உள்ள குறை நிறைகளை நடுநின்று ஆய்ந்து காண்பதும் நமது கடமையாகும்.

இலக்கிய வல்லுனரில் சிலர் இலக்கிய ஆராய்ச்சி செய்யும்போது 'முடத் தெங்கு' ஆகிவிடுகின்றனர். முடத்தெங்கு என்பது வேலி ஓரமுள்ள வளைந்ததென்னை மரம். இவ்வகைத் தென்னை, தான் பிறந்து வளர்ந்த தோட்டத்தில் காய்களை உதிர்க்காமல், பக்கத்தில் உள்ள அயலார் தோட்டத்திலேயே காய்களை உதிர்க்கும். அது போலவே இவ்வகை இலக்கிய ஆய்வாளரும் தமது ஆய்வுப் புலமையை அயலார் ஆக்கத்திற்கே பயன்படுத்தி அமைதி அடைவர்! இத்தகையோர் எவ்வகை ஆய்வு நடத்தினாலும் முடிவில்-நமக்குரியவெல்லாம் பிற மொழியாளரிடமிருந்து வந்ததாகவோ-அல்லது அவற்றை அடியொற்றி வந்ததாகவோ கூறி அமைவர்! ஆனால், இன்று மலர்ந்துவரும்மறுமலர்ச்சியால் இத்தகையோர் மதிப்பிழந்து வருகின்றனர் என்பது நாடறிந்த உண்மையாகும். இத்தகைய நிலையில் ஒருவர் எத்தகைய இலக்கியப் புலமைபெற்றிருக்கிருர் எனபதை விட அவர் தமது இலக்கியப் புலமையை எவ்வழியில் தாம

(4-ம் பக்கம் பார்க்க)

# ஜனநாயகம் என்றால்!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [1 1 59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 26

ஜனநாயகம் என்றால் என்ன? அது எப்படி வளரும்? அதனை எப்படி வளர்ப்பது? என்பன போன்றவைகளுக்கான விளக்கங்கள் அரசியல் மேதைகளால் நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே தரப்பட்டு வந்திருக்கின்றன.

அந்த விளக்கங்களை அடிப்படையாக வைத்தே நாமும், கடந்த பத்தாண்டுகளாக ஜனநாயகம் என்ற பெயரோடு காங்கிரஸ், ஆட்சிப்பீடத்தை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து, ஜனநாயகத்தின் பொறுப்பும்—தேவையும்—அவசியமும் பற்றிப் பேசியும் எழுதியும் வந்திருக்கிறோம்.

அவற்றுள் முக்கியமானது:—எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நியாயம் வழங்க வேண்டுமென்பது. இந்த அடிப்படை உண்மையை --தேவையை--அவசியத்தைக் காங்கிரஸ் அரசு ஏற்க மறுத்தே வந்திருக்கிறது, காரணம் தங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறதென்ற தைரியம் தான். எதனை எப்படிச் செய்தாலும் யார் கேட்பது என்ற அகம்பாவ போக்கில் ஆட்சியை நடத்த முற்பட்டிருக்கிறது.

இந்த வேதனை தரும் போக்கு இப்பொழுது அளவை மீறியதாகிவிட்டதை நாம் கூறவேண்டிய சந்தர்ப்பத்தை நமக்களிக்க மறுத்து, "இதோ நாங்கள் இருக்கிறோம் அதற்கு" என்று கூறுவதுபோல் காங்கிரஸ் முகாமிலிருந்தே, ஜனநாயகம் என்றால் என்ன? எப்படி? என்றெல்லாம் எடுத்துக்கூறி இடித்துரைக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

நாம், ஜனநாயகம் நிலைக்க எந்தெந்தக் காரணங்களைக் கூறினோமோ, அவற்றையெல்லாம் ஒன்று விடாமல், இன்னும் சொல்லப்போனால், நாம் கூறத் தவறியவற்றையும் சேர்த்துக்கூற முற்பட்டிருப்பதைக் காண மகிழ்கிறோம்.

உதாரணத்திற்கு, ஜனநாயகம் என்றால் என்ன என்பதற்குக் காங்கிரஸ் ஏடான "தினமணி" தரும் விளக்கங்களில் சிலவற்றை இங்கு தருகிறோம்:—

"ஜனநாயகம் என்றால் மெஜாரிட்டி பெற்று பதவி வகிக்கும்கட்சி தன்னிஷ்டம்போல் நடந்து கொள்ளலாம் என்பது அல்ல. மிகப் பெரும்பாலான வோட்டுக்களைப் பெற்று பதவிவகிக்க நேரிட்டாலுங்கூட, தெரிவிக்கப்படும் மாறுபட்ட கருத்துக்களையும் ஆட்சேபங்களையும் பரிசீலித்து, நியாயம் எது என்பதைத் தெளிந்தறிந்து, நியாயமான சந்தேகங்களை அகற்றி, பணியாற்ற வேண்டிய கடமை ஆள்வோருக்கு உண்டு. "நாங்கள் செய்வது பெரும்பாலான மக்களின் நன்மையைக் கருதித்தான். எங்களுக்குப் பெரும்பாலோரின் ஆதரவு இருக்கிறது. ஆகையால் ஆட்சேபங்களை மதிக்காமல், எங்களுக்குத் தோன்றியபடிதான் நடப்போம்" என்று சொல்லவோ, சொல்லாமல் அந்தப்படி நடந்துகொள்ளவோ, எந்தக் கட்சியாவது முற்படுமாயின், அதன் நடத்தை ஜனநாயகத்துக்கு இசைவாவது அல்ல. இதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஆட்சியாளர் செய்யும் பிரேரணைகள், கொண்டுவரும் சட்டங்கள் முதலியவை தீர்க்காலோசனையின் விளைவாக உருப்பெற்றவை என்ற திருப்தி ஆளும் கட்சியினருக்கும் பொது மக்களுக்கும் ஏற்படுவது அவசியம். காரிய காரணத் தெளிவுடன் உருப்பெறும் பிரேரணைகள் விஷயத்திலும் நன்மை தீமைகளை, விளைவுகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து அவர்களுடைய ஆதரவைப் பெறுவதுதான் ஜனநாயக முறை. அவர்கள் சொல்லக்கூடிய ஆட்சேபங்களுக்குச் செவிமடுத்து, குற்றம் நீக்கி குணம்கொள்ளும் பண்புதான் ஜனநாயகத்தின் மூச்சு..................

தன் அடிப்படைகளை எந்தக் கட்சியும் கைவிடவேண்டும் என்பதில்லை.........

பெரும்பாலோரின் ஆதரவு இருக்கிறது, பெரும்பாலோரின் நன்மையை நோக்கமாகக் கொண்டது என்பதாலேயே, எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைப்பது தவறு. செய்யும் காரியத்தால், சட்டத்தால், பிறப்பிக்கும் உத்தரவால், அநீதி, கொடுமை எவருக்கும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ளும் பொறுப்

பும் ஆட்சியாளருக்கு உண்டு. மாறுபட்ட நிலைகளைச் சமரசப்படுத்திக்கொண்டுபோவது எவ்வளவு அவசியம் என்பதை விளக்கத் தேவையில்லை. 100-க்கு 80% ஆதரவு பெறும் கட்சிகள் விஷயத்திலேயே இது முற்றிலும் பொருந்தும். காங்கிரஸ் கட்சியானது, பதிவானவற்றில் சுமார் 40% வோட்டுகளைத்தான் பெற்றுள்ள கட்சி. இப்பொழுதுள்ள வோட் — முறை காரணமாக 80% ஸ்தானங்கள் அதற்குக் கிடைத்தாலும், பெரும்பாலான வாக்குகள் அதற்கு எதிரிடையாகப் பதிவானவை என்பதை மறக்கலாகாது...............

மனித உரிமைகளுக்கும் அரசியல் சட்டத்தின் நியதிகளுக்கும் நாட்டின் நிலையான நன்மைக்கும் முதலிடம் கொடுக்க எல்லாக் கட்சியினருமே கடமைப்பட்டவர்கள். சாதாரண மக்களிடமும் இந்தப் பொறுப்பை வளர்க்க வேண்டிய அதிகப்படி கடமையும் அவர்களுக்குண்டு............

பொறுமையையும் துவேஷத்தையும் பரப்பி விளைவிக்கும் வோட் ஜனநாயகத்துக்கு, சமூக நன்மைக்கு உகந்தது அல்ல.........

தேர்தலில் வோட்டுப் பெறுவதற்காக எல்லா வகை நிர்ப்பந்தங்களுக்கும் பணிந்து கொடுப்பது என்ற முறை ஜனநாயகமல்ல''

காங்கிரசாட்சியின் ஜனநாயகம்பற்றி இதுவரை நாம் கூறிவந்தகாரணங்களை அப்படியே 'தினமணி' போன்ற தேசிய ஏடுகள் ஒப்புக்கொண்டுவிட்டன, பாருங்கள் என்று பெருமையடித்துக்கொள்வதற்காக இதனை நாம் இங்கு எடுத்துக்காட்டவில்லை, அந்த அளவுக்கு நாம் போகமாட்டோம்—போகக்கூடாதென்ற கொள்கையுடையவர்கள்.

ஆனல், நாம் கூறுவதில் உண்மையும்பொருளும் இருக்கிறதென்பதை மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவேதான் சில மேற்கோள்களை எடுத்துக்காட்ட நேர்ந்தது.

ஜனநாயகம் இனிமேலாவது தன் முழு வடிவத்தையும் பெறவேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

★

---

### 2-ம் பக்கத் தொடர்ச்சி

பிறந்த சமுதாயத்திற்கு ஆக்கந் தரும் முறையில் பயன்படுத்துகிறார்] என்று நோக்கும் மனப்பான்மை வளர்தல் இயல்பேயன்றோ? இதனல் இலக்கியப் புலமைக்கு இரண்டாம் நிலை கொடுக்கப்பட்டதாகப் பொருள் கொள்ளக்கூடாது. இலக்கியப் புலமையோடு அதனை ஆக்க வழியில் உய்த்துப் பயன் பெறும் மனப்பான்மையும் சரிநிகர் சமமாக இடம்பெற வேண்டும் என்பதே நமது கருத்தாகும்.

இலக்கியப் புலமைவாய்த்தோரில் இன்னுமொரு சாரர் உள்ளனர். இவர்கள், இலக்கியப்புலமை பெறுவதென்பது பழைய குருகுல முறையால் இயலும் என்று நம்புகின்றனர். தனிப்பட்ட இலக்கிய வல்லுனர்களை அடுத்து, இலக்கிய நுட்பங்களையும் பிறவற்றையும் அறிந்துகொள்ளுதல் சாலச் சிறந்தது எனினும், அம்முறை தற்காலத்தில் 'எவ்வளவில் பயன்படும் என்பதையும் சிந்தித்தல் வேண்டும். ஆழமானதும் பரவலானதுமான இலக்கிய அறிவு பெறப் பழம்பெரும் இலக்கியப் புலமையாளர்களை அணுகித்தான் ஆகவேண்டும். ஆனல் எத்தனை பேர் அணுகிப் பயன்பெறல் இயலும் எனபதையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

பழம்பெரும் இலக்கியப் புலமையாளர் இச்சிக்கலுக்கு ஒரு முடிவு காணலாம். தாம் அறிந்த இலக்கிய நுட்பங்கள் அனைத்திற்கும் எழுத்து வடிவம் தந்து எல்லோர்க்கும் தொண்டு புரிதலே அம்முடிபாகும். இன்றுள்ள பழம்பெரும் இலக்கியப் புலமையாளர்கள் இத்தொண்டினைச் செய்து தங்கட்கு ஏராளமான பின்தோன்றல்களைப் பெறல்வேண்டும். அவ்வாறின்றி மூலையிலொதுங்கிச் செயலற்றிருந்தால், தாம் கண்ட பச்சிலைகளின் பெயரைப் பிறரிடம் கூறாமல் மறைத்தநாட்டுவைத்தியர் சமுகம் போல் இவர்களும் குறுகிய மனப்பான்மையால் பின் தோன்றல்களின்றி வறிதே மறைவர் என்பது திண்ணம். அன்றியும் இங்கு கூறபபட்ட திட்டம்நிறைவேற்றப் பட்டால் நாம்தான் இலக்கியப் புலமையாளரின் பின்தோன்றல்கள் என்று தருக்கித்திரிவோர் செருக்கு அடங்குவர்!

இலக்கியப் புலமையாளர் இலக்கியத்தைப் பரவலாகப் படித்துணர்ந்தோரிடம் அனுதாபமும் கூட்டுறவு உணர்ச்சியும் கொள்ளல் வேண்டும். ஏனெனில் அவர்களே பொதுமக்களுக்கும் இலக்கியப் புலமையாளர்க்கும் இடையில் பாலம்போல் விளங்குகின்றனர்; இலக்கியக் கருத்துக்களை எளிமையும் தெளிவும் உடையதாக்கி மக்கள் முன்வைக்கின்றனர். பொதுமக்களின் ஆதரவை இலக்கியத்துறை நோக்கித் திருப்புகின்றனர். ஆதலால் இலக்கியப் புலமையாளர்,

> சில கற்றார் கண்ணும் உளவாம்
> பலகற்றார்க்கு அச்சாணி
> அன்னதோர்சொல்

என்ற உண்மையை நினைவு கூர்வார்களாக! பரவலாக இலக்கியம் கற்றோரும் தமது நிலையையும் தகுதியையும் நினைவு கூர்ந்து செயலாற்ற வேண்டும்.

இலக்கிய ஆய்வார்களாலேயே வாதிடபபடுவதற்கும் முடிவு கட்டப்படுவதற்கும் உரிய சிக்கல்களில்

(16-ம் பக்கம் பார்க்க)

# வயலினும் விகடனும், கேட்கிறது!

கடந்த நவம்பர் 17-ந் தேதி புது டில்லியிலே பேசிய பண்டிதநேரு அவர்கள், காரசாரமாகக் கண்டித்துள்ளார்! தேவையில்லை—விரயம்—இனிமேல் அப்படிச் செய்யக் கூடாது என்றெல்லாம் வெளியிட்டிருக்கிறார்!! ஏராளமான பணத்தைக் கொட்டி எத்தனை ஆண்டுகள் ஆகுமோ என்று காத்திருப்பதைக்காட்டிலும், சிறு சிறு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார். இருநூறுகோடி, நூறு கோடி என்றெல்லாம் செலவழித்துப் பெரிய பெரிய அணைக்கட்டுகளையும் நீர்த்தேக்கங்களையும் கட்டுவதற்குப் பதில் சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களிலேயே இனிக்கவனம் செலுத்தவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார். தாமோதர் — பக்ராநங்கல்—ஹிராகுட், இப்படிப்பட்ட அணைக்கட்டுகள் யாவும் கட்டுவதற்குப் பதில், பணத்தைச் சிறு சிறு திட்டங்களுக்குச் செலவழிப்பதுதான் விவேகம் என்று வெளியிட்டிருக்கிறார். எது, எந்தச் சமயத்துக்கு விவேகம் என்று தெரிந்து கொள்ள, டில்லி அரசைவிட, உலகில் வல்லமையுள்ளது கிடையாது!! ஏனெனில், ஆண்டுக்குப் பல பருவங்கள் உள்ளதுபோல, பருவத்துக்குப் பருவம், 'விவேகம்' மாறும் அங்கே. திடீரென உணவுப் பொருள்களை வெளியிலிருந்து வரவழைப்பது விவேகமல்ல—செத்தாலும் சாவோம்—வரவழைக்கமாட்டோம் என்பார்கள்! சில காலத்துக்கெல்லாம் இதுவரையில் வரவழைக்காமலிருந்தது விவேகமே அல்ல, வரவழைப்பதுதான் விவேகம் என்பார்கள்! எஃகு, ஆலைகள்போன்ற கனரகத் தொழில்களை ஆரம்பித்து நடத்துவதுதான் இப்போது விவேகமான செயல் என்பார்கள் — வெளிநாடுகளுக்கெல்லாம் ஓடி, பணத்தைச் செலவழித்துத் திட்டமெல்லாம் போடுவார்கள். உற்சாகம் கரைபுரண்டுஓடும். எங்கும் அதைப்பற்றியே எல்லா மந்திரிகளும், அதிகாரிகளும் பேசுவார்கள். கொஞ்ச நாட்களுக்கெல்லாம் இது தலை கீழாக மாறி, கனரகத் தொழில்களைவிடச் சிறு சிறு தொழில்களில் சிந்தனையையும் பணத்தையும் செலவழிப்பதே விவேகம் என்று சொல்லி விடுவார்கள்!! ஹிராகுட்—பக்கிராநங்கல் — போன்ற பெரிய பெரிய அணைக்கட்டுகளைக் கட்டி, அதை உலகுக்குக் காட்டிக் கித்தாப்புத் தேடிக் கொள்ளவேண்டும் என்று நினைத்தார் நேரு. அணைகள் கட்டப்பட கட்டப்பட, அந்நிய நாட்டிலிருந்து பெரிய பெரிய பிரமுகர்களையெல்லாம் அழைத்துவந்து காட்டிப் பெருமிதம் கொண்டார்கள். இப்போது, அது தவறு, இனி அதுபோல் கட்டப்படக் கூடாது என்கிறார்கள்.

**வடக்கே, கட்டப்படவேண்டிய இடங்களிலெல்லாம் பெரிய அணைகள் ஏற்பட்டு விட்டன.**

**இனிமேல், அந்த அணைகளிலிருந்து வரும் தண்ணீரைப் பயன்படுத்த சிறு சிறு திட்டங்கள்தான் தேவை.**

எனவே, நேரு அவர்களைப் பொறுத்தவரையில் இந்த நேரத்து விவேகம், சரியாகக்கூட இருக்கலாம். ஆனால் தென்னாட்டைப் பொறுத்தவரையில்? தென்னாட்டைப் பொறுத்தவரையில் நேரு அவர்களின் புதிய விவேகத்தால் புறப்படப்போகும் நன்மைகள் என்ன!!

*

பெங்களூரிலிருந்து வரும், "டெக்கான்கெரால்டு" எனும் ஆங்கில ஏடு தீட்டுகிறது:

"மைசூருக்கும் ஆந்திரத்துக்கும், துங்கபத்ரா அணைக்கட்டு மூலம் பலனும் பயனும் கிடைக்க முடியும் என்று கருதப்படுகிறது. இதுபற்றி அண்மையில் பார்லிமெண்டில் கேள்விகேட்டபோது, அணைக்கட்டின் முதல் அங்கம் மட்டுமே; 'பணமில்லாத காரணத்தால், கட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று ஒரு டெபுடி மந்திரி சொன்னார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இதுமுடியாதென்பதோடு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குள் முடிக்கவிருப்பதாகவும் சொன்னார். அதாவது, எப்போது இந்த அணைக்கட்டின் 'முதல் அங்கம்" முடிவடையும் எனகிற உறுதியில்லை!! அந்நியசெலாவணி நெருக்கடி என்கிற குரல்வந்ததும் இந்த முதல் அங்கத்திலும் எதையெதை வெட்டலாம், குறைக்கலாம் என்று பேசப்பட்டது. வடக்கேயுள்ள மாபெரும் அணைகள் கட்டப்பட்டபோது இந்த நெருக்கடிகள் பேசப்படவில்லை! இப்போது, டில்லிக்கு நெருக்கடி என்றதும், தென்னாட்டார்தான் தியாகம் செய்யவேண்டும் போலும்!! இந்தச் சமயத்தில், பெரிய அணைக்கட்டுகளுக்குப்பதில் சிறிய திட்டங்களே தேவை, கவனிக்கப்பட வேண்டியவை என்கிறார், நேரு. மத்திய அரசின் நீர்பபாசன மின்சார போர்டின்

29வது ஆண்டுக் கூட்டத்தில் பேசுகிறபோது, சிறு திட்டங்களே விவேகம் என்கிருர். நேருவுடைய உற்சாகத்தையும் உள்ளத் தூய்மையையும் குறை சொல்ல வில்லை நாம். ஆனல், இதே நேரு தான், சுதந்திரம் கிடைத்தபிறகு, பெரிய பெரிய அணைக்கட்டுகளைப் பற்றி உற்சாகத்தோடும் வெறியோடும் பேசியவர் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

"பத்தாண்டுகளுக்குப் பிறகு, வடக்கே பல திட்டங்கள் உண்டாக்கப்பட்டபிறகு, பெரிய திட்டங்கள் கூடாதெனச் சொல்லப்படுகிறது.

வட இந்தியஅணைக்கட்டுகளுக்கெனக் கோடிக் கணக்கான பணம், கண்ணை மூடிக்கொண்டு, செலவிடப்பட்டு இருக்கிறது. அங்கேயெல்லாம் நடைபெற்ற ஊழல்களைப்பற்றி வரும் நாற்றம் சகிக்க முடியவில்லை. இந்நிலையில் துங்கபத்ரா அணைக்கட்டு என வரும்போது, பணமில்லை என்று சொல்வதன் பொருள் புரியவில்லை நமக்கு. எவ்வளவோ காலமாக மக்கள் எதிர்பார்த்த கனவு இந்த அணைக்கட்டு."

❋

தெற்கே, பெரிய நீர்த்தேக்கங்கள் இல்லை! அதற்கான மார்க்கங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை!! — இந்நிலையில் நேரு அவர்கள், பெரிய அணைக்கட்டுகள் இனிக் கட்டப்படமாட்டா என்று அறிவித்துள்ளார்.

வடக்காவது! தெற்காவது!!— என்று நம்மைக் கண்டிக்கும் கனம்கள், இதற்குப் பதில் சொல்லியாகவேண்டும். வடக்கையும் தெற்கையும் ஒன்ருகத்தான் நோக்கும் எமது டில்லி சர்க்கார் என்று கூறும், நமது மந்திரிமார்கள் இந்தப் போக்குக்கு விளக்கம் சொல்லத்தான் வேண்டும்.

எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகப் பெரிய அணைக்கட்டுகள் கட்டிவிட்ட பிறகு, இப்படிச் சொன்ருல்கூடப் பரவாயில்லை! இதோ, தெற்கேயுள்ள ஒரே ஒரு அணைக்கட்டு, ஒரு அங்கமே முடியவில்லை; அதற்குள் இந்த அறிவிப்பு வருகிறதென்ருல் என்ன பொருள்! நேரு அவர்களுக்கே, சிறு திட்டங்களுக்குத்தான் ஊக்கமளிக்கவேண்டும் என்கிற உற்சாகம் வந்துவிட்டால், பிறகு யார் துங்கபத்திரையையும் கிருஷ்ணாவையும் கவனிக்கப் போகிருர்கள்?

**வடக்கு வடக்குத்தான்! அங்குள்ளவர்களுக்கு, தென்னாட்டையும் சேர்த்துக் கொண்டு வாழவேண்டுமென்ற ஆசையும் ஆர்வமும் அதிகமிருக்கலாம். என்ருலும், நம்முடைய வாழ்வும் பிரச்னைகளும் அவர் கண்ணிலும் படுவதில்லை; உள்ளத்திலும் உறைப்பதில்லை.**

இதை இந்தக் கிழமை, எந்த அரசியல் இயக்கத்திலும் தொடர்புகொள்ளாதவரும், பிரபல இசை ஞானியுமான மைசூர் டி. சௌடையா அவர்களே எடுத்துக் கண்டித்துள்ளார். லலித கலைக்கழக ஆதரவில் சென்னையில் நடந்த தென்னிந்திய இசை மாநாட்டிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் உருக்கமுடன் குறிப்பிட்டிருக்கிருர். நமக்கே ஆச்சரியமாக இருந்தது. அவரே வடக்குத் தெற்கு என்று பேசுகிருர் என்று! ஏனெனில், அவரைப்போன்ற இசை ஞானிகள், அரசியலில் ஈடுபாடுகொண்டவர்களல்ல; தங்கள் தொழிலை மட்டுமே கவனிப்பவர்கள். அவர் பேசியிருக்கிருர்.

"மத்திய சர்க்கார், பாரபட்சம் காட்டுகின்றனர். கலைகளுக்கு ஆதரவு அளிப்பதில், வடக்குக்குக் காட்டப்படும் சலுகை நமக்கில்லை. தென்னாட்டவருக்கு ஆத்திர மூட்டத்தக்க வகையில் நடந்துகொள்கின்றனர்."

"கலை, கலாச்சார வளர்ச்சிக்கென ஏராளமான பணம் செலவிடுகிருர்கள். ஆனல், தென்னாட்டவரைவிட வட நாட்டு இசைவாணர்களுக்கே அதிகமான வாய்ப்பும், வசதியும், உதவியும் செய்து கொடுக்கிறது."

இசைத்துறையினருக்கே, இந்த எரிச்சல் வந்துள்ளது என்ருல், யாரே இந்த உண்மையை மறுக்க முடியும்? கீதம், பிறந்ததே தெற்கேதான் என்று சொல்லுகிருர்கள்! ஆனல் அந்தக் கலையை மாற்ருந்தாய் மனப்பான்மையுடன் கவனிக்கிறது என்கிருர் வயலின் வேந்தர் சௌடையா!!

❋

பொருளாதாரம்--கலை-மட்டுமின்றி இராணுவத் துறையிலும், வடக்கு எப்படி நடந்துகொள்கிறது என்பதை, இந்தக்கிழமை, "ஆனந்த விகடன்", ஏடு எடுத்துக்காட்டியிருக்கிறது.

"இந்திய இராணுவத்தில் சீக்கியர்கள், பஞ்சாபிகள் போன்ற ஒரு குறிப்பிட்டவகுப்பினர்தான் இடம் பெற முடியும் என்ற நிலை, பிரிட்டிஷார் ஆண்ட காலத்தில் இருந்து வந்தது. இவர்கள் மட்டுமே இராணுவத்தில் சேவை செய்யத் தகுந்த சாதியினர் என்று சொல்லப்பட்டது"

"இது முற்றிலும் பொய் என்பது சென்ற உலக யுத்தத்தின் போது நன்கு நிரூபிக்கப்பட்டுவிட்டது... போர் முனையில் பஞ்சாப், சீக்கியரல்லாதவர்களின் சாதனை வியக்கத்தக்கதாக இருந்தது. அசாம், பர்மா காட்டுப் பிரதேசங்களிலும், எகிப்திலும் சூடானிலும் சென்ற இந்தியப் படையினரில் தென்னாட்டவர் போர்த் திறமை வெளிப்பட்டது."

"அதோடு, தற்காலப் போர் முறைக்கு உடல்கட்டு முக்கியமல்ல. தந்திரமும், மதி நுட்பமும், பகுத்தறிவுமேதான அதிகம் தேவைப்படுகிறது. அதோடு, இந்திய இராணுவத்தில் சேவை புரிவது எல்லாப் பகுதியினர்களுடைய உரிமையும்கூட!"

"ஆகவே, தேர்வுக்கு மற்றப் பகுதிகளிலிருந்து இராணுவத்துக்குத் தகுதி உள்ளவர்கள போதிய


## "கேரள நாடு"

கேரளத்தின் அன்ருட அரசியல் செய்திகளையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல், பொருளாதார, சமூக நிலைபாடுகளையும் தாங்கிக்கொண்டு 1959 ஜனவரி 15-ம் நாள் திராவிடர்களின் மத்தியில் பவனி வருகிறது "கேரள நாடு" மலையாளம் (மாதமிருமுறை) எல்லா மாதங்களிலும் 12-ம், 25-ம் நாட்களில் வெளிவருகிறது.

ஆசிரியர், மு. வரதராசன்

எல்லா விவரங்களுக்கும்;-

மானேஜர் 'கேரளநாடு'

கிருஷ்ணன் பழ மண்டி

வி. கே. ரோடு, பாலக்காடு.

அளவில் முன்வரவில்லையா? அல்லது மாணவர்களைப் பொறுக்கும் முறையில் கோளாறு இருக்கிறதா?"

"ஒரு தனிப்பட்ட பிரதேசத்தாரின் உரிமைபோல் இதை அனுமதிக்க முடியாது"

என்கிறது ஆனந்தவிகடன்! அண்மையில், இராணுவ அதிகாரிகளைப் பயிற்றுவிக்கும் இராணுவப் பயிற்சிப் பள்ளிக்குப் பொறுக்கியெடுத்த மாணவர்களின் பட்டியலை வெளியிட்டிருக்கிறது, டில்லி.

**பொறுக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 251! அதில் தென்னகத்தார் ஆறே ஆறுபேர் தான் இருக்கிறார்கள்!!**

அதனால்தான், இப்படி வேதனையுடன் கேட்கிறது ஆனந்த விகடன்.

*

யார் கேட்டாலென்ன! யார் சொன்னாலென்ன!! எங்கள் பாட்டைப் பாடிக்கொண்டுதான் இருப்போம்—என்று நமது அமைச்சர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பதில் சொல்லுவதுபோலக் கருதிக்கொண்டு பேசலாம். ஆனால், இதுபோன்ற உணர்ச்சிகள், திராவிட முன்னேற்றக் கழகத்திடம் மட்டுமல்ல, நாட்டின் வேறுபல துறைகளில் இருப்போரின் இருதயத்திலும் இடம் பெற்று வருகிறதென்பதை மறந்து விடக்கூடாது. டில்லியின் மாற்றாந்தாய் மனப்போக்கு, தாக்கத் தாக்க, நொந்த உள்ளங்களும், வெந்த இருதயங்களும், அவர்களை அறியாமலே, "ஒழிக டில்லி ஆதிக்கம்!" என்று மூச்சு விடத்தான் செய்யும்.

★

32 லட்சம் ரூபாய்களுக்கு 'சோப்' வியாபாரம் நடந்திருக்கிறதாம்! மைசூர் சர்க்காரே வைத்து நடத்தி வரும் சோப்புத் தொழிற்சாலையில் கடந்த 1956-57 ல் நடைபெற்ற வியாபார விபரம் இது!! சர்க்கார் நடத்தாமல், தனிப்பட்ட நபர்களது கையில், இந்தத் தொழிற்சாலையிருந்திருக்குமாயின் இந்த வருமானம் அவர்களுக்குத்தானே போயிருக்கும்!!

# 'ஆதாரக்கல்வி அவசியமா?'

[ ஹபீப் முஹம்மது ]

உலகிடையே உள்ள நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து முதலான நாடுகளை எடுத்துக்கொண்டோமானால் அங்கெல்லாம் ஆதாரக் கல்வி போன்ற திட்டங்களைப் பார்க்கமுடியாது. காரணம், அந்நாட்டு மக்களுக்குத் தெரியும் உலகம் வெகு விரைவில் முன்னேறி வருகிறது என்றும், இக்கல்வித் திட்டத்தினால் முன்னேற முடியாது என்றும். மேலைநாட்டாரின் கல்வித் திட்டமே பாராட்டும் வகையில் அமைந்திருக்கிறது. அந்தச்சிறப்பான முறையிலே கல்வித் திட்டம் அங்கே அமைந்திருப்பதால்தான் இன்றைய தினம் அவர்களால் பொறி இயல் நிபுணர்களையும், கப்பலோட்டிகளையும், விமானமோட்டிகளையும், விஞ்ஞானிகளையும் உலகுக்கு அளிக்க முடிகிறது. அத்தகைய கல்வி முறைகளைப்பற்றி நாம் பெருமைப் படாமல் இருக்க முடியுமா?

இன்றைய இந்திய உபகண்டத்தின் மக்கள் தொகை சுமார் 40-கோடி. உலகம் வியக்குமளவிற்குப் பெரும் வல்லரசாகத் திகழும் அமெரிக்காவின் மக்கள் தொகை 16-கோடி. : இவ்வளவு குறைவான தொகையுள்ள மக்கள் பொருளாதாரம், கலாச்சாரம், விஞ்ஞான முன்னேற்றம், நாகரிகம் ஆகியவற்றில் உயர்ந்திருக்கிறார்கள் என்றால், காரணம் அந்நாட்டின் கல்வி முறை அமைப்புத்தான். இந்தியாவில் 13-ல் ஒரு பாகமே உள்ள இங்கிலாந்தும் சிறந்த முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைந்திருப்பதும் அந்நாட்டுக் கல்வி முறையின் சிறப்புத்தான். பொதுவுடைமைக் கருத்துக்களுக்கு இருப்பிடமான ரஷ்யா வல்லரசாகவும், ஆராய்ச்சி செய்யும் நாடாகவும் இருப்பதற்குக் காரணம் அந்நாட்டின் கல்வி முறை அமைப்புத்தான்.

ஜப்பானை எடுத்துக் கொள்ளுங்கள். கைத்தொழிலில் முதலிடம் வகிக்கிறது. சைனாவும் அதே போன்று, ஐரோப்பாக் கண்டம் பூராவையும்பார்த்தால் முன்னேற்றம் இல்லை, பொருளாதாரக் குறைவு என்ற பிரச்னையே எழும்புவதற்கு வாய்ப்பில்லை என்பதை அறிவோம். அவர்களுக்கெல்லாம் தெரியும் இன்றைய அணுகுண்டு யுகத்திலே கைராட்டையையும். தக்களியையும் வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்தால் நிச்சயமாக முன்னேற முடியாது என்று. ஏக இந்தியவாதிகள் கூறுகின்றார்கள் ஆதாரக் கல்வியினால்தான் அன்பு, பண்பு, சகோதரத்துவம், சமத்துவம், கலாச்சாரம் யாவும் வளருகின்றன என்று. அப்படியானால் ஆதாரக் கல்வி ஏற்படுவதற்கு முன் விளங்கிய மேதைகள் எல்லாம் கலாச்சாரம், பண்பு குறைந்தவர்களா? இல்லை, முன்னேற்றம் காணாதவர்களா? ஆதாரக்கல்வி நாட்டில் தோன்றுவதற்கு முன்தான் கணித மேதை இராமானுஜத்தைக் கண்டோம். ஆங்கிலேயரும் வியக்கும் அளவிற்கு ஆங்கில மேதையாக விளங்கிய சீனிவாச சாஸ்திரியையும் கண்டோம். இதோ ஆற்காட்டு இராமசாமி அவர்களைப் பார்க்கிறோம். இன்னும் எவ்வளவோ அரும் பெருந்

தலைவர்களையும், அறிஞர்களையும் கண்டோம். காண்கின்றோம். இன்று பெரும் புகழுடன் விளங்கும் அறிஞர்கள் எல்லாம் ஆதாரக் கல்வியினால் உயர்ந்தவர்கள் அல்லவே? இவர்கள் எல்லாம் பண்பாடு குறைந்தவர்களா? ஆதாரக்கல்வி பயிலாததால் தரம் குறைவாகக் கருதப்பட்டார்களா? இல்லையே...உண்மையை அறியப் போனால் ஆதாரக்கல்வித் திட்டம் நாட்டில் புகுந்தவுடனே புரியாத புதுக் குழப்பம்தான் ஏற்பட்டிருக்கிறது.

டாக்டர் லக்ஷ்மணசாமி அவர்கள் கூறுகிறார்களே, இக்கல்வித் திட்டமே சரியில்லை என்று. அவர் என்ன அறிவு சூன்யமுள்ளவரா? மேதைகளின் பட்டியலிலே சேர்ந்தவராயிற்றே. அவர் இக்கல்வித்திட்டத்தைப்பற்றிப் பேசுகின்றார் என்றால் ஆராயாமலா பேசுகின்றார்? இன்னும் அவரைப் போன்று அறிவுலக மேதைகளும் நாடு போற்றும் நல்லறிஞர்களும், கல்வி நிபுணர்களும் பேசிய வண்ணமாகவே இருக்கின்றார்களே! ஆதார்க்கல்வி சரியில்லை, பலனில்லை என்று காரணகாரியத்தை விளக்குகின்றார்களே! பயன், மீண்டும் குழப்பம்தான். கைராட்டை, தக்ளி, பருத்திதான்!

இந்திய உபகண்டம் முன்னேற்றப் பாதையை நோக்கி அடி எடுத்து வைப்பதற்கு முட்டுக்கட்டையாக இருப்பது ஆதாரக் கல்வித்திட்டமும், இன்றைய விவசாய முறையும் ஆகும். விவசாயம் செய்யும் நாடுகளான ஜப்பான், சீனா, பர்மா போன்ற நாடுகள் முன்னேறவில்லையா என்று நினைக்கலாம். அந்த நாடுகள் எல்லாம் விவசாயம் மட்டும் செய்துகொண்டிராமல் சிறந்த கைத்தொழில்களுக்கும் ஆக்கம் அளித்திருப்பதால் தான் இன்று முன்னேற்றம் அடைந்த நாடுகளாக மதிக்கப்படுகின்றது. இங்கிலாந்து, ஜெர்மனி முதலான நாடுகளின் இயந்திரத் தொழில்களும், கைத்தொழில்களும்தான் இன்றைய தினம் அவர்களது பெருமையையும், வளர்ச்சியையும் உலகுக்குக்காட்டுகின்றது.

ஆதாரக் கல்வியிலே முக்கிய இடம் பெற்றிருப்பது நூற்பும், விவசாயமும்தான். இவை இரண்டுமே பழைமையை அடிப்படையாக வைத்துக்கொண்டு சென்றுகொண்டே இருந்தால் இந்தியத் துணைக்கண்டம் முன்னேறுவது என்பது சந்தேகம் தான். முன்னேற்றம் அடைந்த நாடுகளின் வரலாற்றைப் பார்க்கும்போதெல்லாம் நமக்கு நூற்பும், தற்கால விவசாய முறையும் மனக்கண்முன் தோன்றுவதில்லை. விஞ்ஞானத்தால் முன்னேறிய நாடு, ஆராய்ச்சியினாலும், பொருளாதாரத்தாலும் நாகரிகத்தாலும் முன்னேறிய நாடு; என்பவைதான் தோன்றும்.

இந்திய உபகண்டத்தைத் தவிர்த்து மற்ற நாடுகளைப்பற்றிப் படிக்கும்போது என்ஜினீயர்கள், விஞ்ஞானிகள், தத்துவ மேதைகள், டாக்டர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்ற பெயர்கள்தான் நம் செவியை முற்றுகையிடும். இந்திய நாட்டின் வரலாற்றை இன்னும் சில ஆண்டுகள் கழித்துப் பார்த்தால் அதில் நாம் அறநிலையப் பாதுகாப்பாளர்கள், அறநெறிச்சாரர்கள், அருள்நெறிக் கூட்டத்தார்கள், அடியார்கள், அஹிம்சாவாதிகள் என்ற பெயர்களைத்தான் காண முடியும். கேட்க முடியும். இந்த ஆதாரக்கல்வி நீடித்துக்கொண்டே போனால் இதே நிலைதான் சரித்திரத்தினிடையே இடம்பெறும். அதற்காக இந்திய மக்களைக் குறை கூறுவதாக நினைக்கலாம்? சில அறிஞர் பெருமக்களைத் தவிர, அதுவும் முன்புள்ள கல்விபயின்ற காரணத்தால் விளங்கிய மேதைகள் தவிர.

ஆடம்பரத்திலும், நாகரிகத்திலும் சிறந்து விளங்கும் அமெரிக்கர்களின் மூதாதையர்களும், ஐரோப்பியர்களின் பரம்பரையினரும் 300-ஆண்டுகளுக்கு முன் காட்டுமிராண்டியாக வாழ்ந்தார்கள் என்றால், ஆச்சரியமாகத்தான் இருக்கும். அந்த ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் நாகரிகத்தையும், கலாச்சாரத்தையும் பரப்பி மேம்பாடுடையவர்களாக விளங்கினார்கள் என்பதைக் கேள்விப்படும்போது வியப்பு எல்லையைக் கடந்துவிடுகிறது. அநாகரிகத்தின் அடிப்பீடத்திலே அமர்ந்திருந்த நாடு முன்னேற்றம் அடைந்துவிட்டது. நாகரிகம் கற்றுக்கொடுத்த நாடு பின்தங்கி விட்டது.

ஆங்கிலேயன் நாட்டைப் பிடித்து ஆள ஆரம்பித்தது முதல் முன்னேற்றம் அடைய முடியவில்லை என்று கூறலாம். அவன் வந்ததினால்தான் ஆஸ்திகத்திற்கும், வைதீகத்திற்கும் அமைதி கட்டி ஆராய்ச்சி மனப்பான்மையை உண்டுபண்ணினான். ரேடியோ, டெலிபோன், தந்தி, கப்பல், விமானம் முதலியவைகளைக் கொடுத்துச் சென்றான். விஞ்ஞான முன்னேற்றம் அடைவதற்கு வழிகோலியாக அமைந்தவர்கள் ஆங்கிலேயர்களே. அவர்களால் ஒரு சில தீமைகள் செய்யப்பட்டபோதிலும், விஞ்ஞான உலகத்திற்கு நம்மையெல்லாம் அழைத்துச் சென்றவர்கள் அவர்களே!

இந்திய நாட்டைத்தவிர வேறு எந்த நாட்டிலும் தக்ளி, ராட்டை என்று கேள்விப்படுகிறோமா? ஆதாரக்கல்வி என்று கேள்விப்படுகிறோமா...? அந்நிய நாட்டிலிருந்து வரும் அரும்பெருந் தலைவர்களாவது இக்கல்வித் திட்டத்தைப் பற்றி ஏதாவது கூறுகின்றார்களா? கூறமாட்டார்கள். அந்தத் திட்டம் எவ்வளவு தூரம் வெற்றியைக் கொடுக்கும் என்பதை அறிவார்கள். காலவிரயம், பணவிரயம், வருமானக் குறைவு, உற்சாகமின்மை ஆகிய அம்சங்கள் தான் இக்கல்வித்திட்டத்தினால் விளையும் பலன்கள். இத்தகைய திட்டங்களை மேலை நாட்டார் விரும்பாததிற்குக் காரணம் மேற்கூறிய மூன்று அம்சங்களும் அவர்களிடையே இல்லாததால்தான்.

ஆதாரக்கல்வி ஏற்பட்டு ஏறக்குறைய சில ஆண்டுகளே ஆனபோதிலும், முற்னேற்றப் பாதையை நோக்கி மக்கள் செல்கின்றார்களா என்றால் அதுதான் இடையாது. ஆண்டுதோறும் ஆதாரக்கல்வி வளர்ச்சிக்காக என்று இலட்சக் கணக்கில் பணம் விரயமாகிறது. உலகம் வெகு விரைவில் முன்னேறிக்கொண்டு

(12-ம் பக்கம் பார்க்க)

மக்களைக் கைதூக்கிவிடு. ஆனால் அவர்கள் தங்கள் ஆற்றலை இழந்துவிடும்படி செய்யாதே! மக்களுக்கு வழிகாட்டு, அறிவூட்டு. ஆனால் ஒன்றைத் துவக்கி நடத்தும் திறமை குலையாதிருக்குமாறு பார்த்துக்கொள். இதைச் செய்ய கூடியவனே உண்மையான தலைவன்.

கற்பனை நாடகம்

# அந்தி சிரிக்கிறது!

ச. இராமலிங்கம், எம்.ஏ.

சென்ற இதழ் தொடர்ச்சி.....

கருணு:- விமலா, மல்லிகாவையும்' குணவதியையும் வரச்சொல். அப்படியே நீ மலையடிவாரத்திற்குச் சென்று பச்சிலைகள் கொண்டுவா......

விமல:- அப்படியே தந்தையே.

[கருணைநந்தர் குணசேகரனைத் தொட்டுப்பார்த்து பிறகு தலைக்கட்டை அவிழ்க்கும்போது]

குணசேகரன்:- மெதுவாக......... சித்ரா...சித்திரா...

கருணு:- குணசேகரா......அவளுக்குச் சொல்லியனுப்பி இருக்கிறேன் வந்துவிடுவாள்.

[அப்போது குணவதியும், மல்லிகாவும் வந்து]

குணவதி:- இதோ வந்துவிட்டேன் தந்தையே...

குணசேக:- சித்ரா......சித்ரா....நீ வந்துவிட்டாயா....வா......என் அருகில் வா...

குணவதி:- (உற்றுப்பார்த்து...... ஓடி அவனை அணைத்து) அத்தான்...அத்தான்...நான்...

குணசே:- தெரியும் சித்ரா......நீ இவ்வளவு நாட்கள் என் அருகில் இல்லாததற்கு மன்னிப்புக் கேட்கிறாய்...தாயின்மேல் பாசம் இருப்பது சகஜம்தானே...

குணவதி:- அத்தான்...கண்கள் ...காயம்...

குணசே:- ஆம் சித்ரா...இன்னும் குணமாகவில்லை....சித்ரா...அந்தக் காயம்தான் உன் நினைவுச் சின்னம். நீ என்னைவிட்டுப் போய்விட்டபிறகு, உன்ஞாபகம் வந்து ஒருநாள் இரவு நாம் விளையாடும் தோட்டத்திற்கு ஓடினேன். தவறி விழுந்து ஒரு பாராங்கல்லில் மோதிக்கொண்டேன்.

[குணவதி அழ]

குணசே:- ஏன் சித்ரா அழுகிறாய் ......இன்னும் சில நாட்களில் காயம் ஆறிவிடும்...கருணைநந்தர்கூடக் கண்பார்வையை வரவழைத்துவிடுவார்.......ஆனால் சித்ரா.........இனி நீ என்னைப் பிரியக்கூடாது...

குணவதி:- அத்தான்...அத்தான் ...நான் இனி உங்களைப்பிரியவே மாட்டேன்...

கருணு:- குணசேகரா...நீ பாலும் பழமும் சாப்பிட்டுவிட்டு இன்றிரவு நன்றாகத் தூங்கு... உடம்பை அலட்டிக்கொள்ளாதே!

குணசே:- அப்படியே.....சித்ரா.... கைகொடு...நான் நடந்தே வருகிறேன்.

[இருவரும் உள்ளே போக]

கருண:- என்ன ஒரே குழப்பமா இருக்கிறதே.........இவள் அத்தான் என்கிறாள். அவன் சித்ரா என்கிறான். இவள் பெயரோ குணவதி.........(அப்போது விமலன் வர) விமலா நீ உள்ளே சென்று குணசேகரனுடன் பேசிக்கொண்டிரு...... குணவதியை அனுப்பு...

விமல,- அப்படியே தந்தையே!

[உள்ளே போய்......சிறிது நேரம் கழித்துக் குணவதி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக வந்து]

குணவதி,- தந்தையே! தந்தையே! அவர் கண்களை எப்படியாவது குணப்படுத்த வேண்டும்...

கருணு:- குணவதி எழுந்திரு... யாரோ ஒருவருக்கு நீ ஏன் பிச்சை கேட்கவேண்டும்?

குணவதி:- தந்தையே அவர் யாருமல்ல......என் காதலர் குணசேகரர்.

கருணு:- ஆ! அப்படியா......இனி வருந்தாதே...

மல்லிகா:- அப்படியென்றால் நீ குணவதி என்று சொல்லிவிடக்கூடாது...

கருணு:- மல்லிகா...அதுமாத்திரம் வேண்டாம். தற்போது அவன் சித்தமும் சிறிது கலங்கியிருக்கிறது...குணவதி நீ சித்ராவாகவே நடிக்க வேண்டும்...

குண:- தந்தையே இதுவும் என் சோதனையா...கண்ணகி மாதவியாக நடிக்கவேண்டுமா? தந்தையே கண்பார்வை வந்தவுடன்?

கருணு:- அப்போது நான் பார்த்துக்கொள்கிறேன் அதற்கு முன்பு நீ யார்? உன் கதையைச் சொல்லித்தானாகவேண்டும்?

குணவதி:- தந்தையே! என் சோகக்கதையைச் சொல்லித்தான் ஆகவேண்டுமா...

கருணு:- ஆமாம்......இல்லையென்றால்...

குணவதி:- அப்படியே தந்தையே! சொல்கிறேன்:—

"நான் சுவர்ணபுரியில் பிறந்தவள். என் தாய் தந்தையரும் சிறிய வயதில் இறந்துவிடவே,

ஒரு பெண்ணான நான், தாய் மாமன் வீட்டில் வளர்ந்தேன். தாய் மாமன் மகன் தான் இவர்—சிறுவயதில் மணல்வீடு கட்டி விளையாடிய நாங்கள் பருவம் வந்தவுடன் — வண்ணப் புறாக்களாகக் காதல் சோலையில் ஓடி விளையாடினோம்--என் பதினெட்டாம் வயதில் மாமாவும் இறந்தார் — மாமியின் கண்காணிப்பில் வளர்ந்தோம். இவர் சிற்பக்கலையில் தேர்ச்சிபெற்றார்—ஓவியமும் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டார் — அதற்கும் அரசர் உதவிசெய்வதாகக் கூறினார்'' — அப்போது ஒருநாள்—

## காட்சி 4

இடம்:- சொர்ணபுரி

[குணசேகரனின் தாய் திலகவதி அம்மையார் அரிசியில் நெல்லும் கல்லும் பொறுக்கிக்கொண்டிருக்க, அப்போது குணசேகரன் வந்து]

குணசேகரன்:- அம்மா.....அம்மா ...இன்று உங்களுக்கு நல்லதோர் செய்தி சொல்லப் போகிறேன் அம்மா...

திலக:- சொல்லடா.........குணசேகரா...நீ நற்செய்தி சொல்வதால் என் மனம் பூரிப்பு அடையும்...

குணசே:- அம்மா...நான் இரத்தினபுரி செல்கிறேன்.

திலக:- என்ன இரத்தினபுரிக்கா? எதற்காக? ஒற்றனாகவா... ...வேண்டாமடா...உன் தந்தையு:ர்...

குணசே:- அம்மா! நான் ஒற்றனாகச் செல்லவில்லை...ஓவியக்கலை கற்றுக்கொள்ள இரத்தினபுரியிலுள்ள மகேசன் மண்டலத்துக்குப் போகிறேன்.

திலக:- அப்படியா........போய்வா கண்ணே! இதையெல்லாம் பார்க்க உன் தந்தையில்லையே ...குணசேகரா...நான் சிறிது வெளியே போய்விட்டு வருகிறேன்; வீட்டைப் பார்த்துக் கொள்...

குணசே:- அப்படியே அம்மா... குணவதி எங்கே?...

திலக:- வந்துவிடுவாள்......தண்ணீர் கொண்டுவரப் போயிருக்கிறாள்!

குணசே:- குணவதி...குணவதி... சீக்கிரம் வாயேன்!...அவளிடம் எப்படி இதைச் சொல்வது... நான் அவளைப் பிரிகிறேன என்றால் அழுவாளே...

குணவதி:- என்னங்க அத்தான் ...எந்தக்கோட்டையைப் பிடிக்க இவ்வளவு பலமான யோசனை...

குணசே:- கோட்டையைப் பிடிக்க நான் என்ன சிப்பாயா?

குணவதி:- அப்படியென்றால் என்ன யோசிக்கிறீர்கள்?

குணசே:- அதுவா...உன்னிடம் ஒன்று கேட்கவேண்டும்?

குணவதி:- என்ன கேட்கப்போகிறீர்கள் — எப்போதும்போல் நீ வீணைவாசி, நான் பாடுகிறேன் என்றுதானே!

குணசே:- ...ஆமாம்...அதேதான் குணவதி...நீ வீணையை மீட்டு நான் பாடுகிறேன்...

குணசே:- .........

[பாட்டு முடிந்தவுடன் எழுந்து அருகே சென்று முத்தமிட நெருங்க]

குணவதி:- ஐயோ...அத்தை வந்து விட்டார்கள்!

[அவன் பயந்து தள்ளி நகர்ந்துவிட அவள் சிரிக்கிறாள்]

குணசே:- என்னைத்தானே ஏமாற்றினாய்...பார் நானும் உன்னை ஏமாற்றுகிறேன்...

குணவதி:- அத்தான் வேண்டாம்...

குணசேக:- குணவதி நான் இரத்தினபுரி செல்கிறேன்!

குணவதி:- என்னைப் பிரிந்தா!

குணசே:- கண்ணே சிறிது நாட்களுக்குத்தான்? ஓவியக்கலை பயின்று வரச்செல்கிறேன்—

குணவதி:- அத்தான்!

குணசே:- கண்ணே! எங்கே சிரித்த முகத்துடன் போய்வா என்று சொல்! அதுதானே தமிழ்ப் பெண்களுக்கு அழகு...

குணவதி:- போய்வாருங்கள் அத்தான்.

## காட்சி 5

இடம்:- இளம்பரிதிக் கோட்டம்

குணவதி:- இப்படி எங்களை விட்டுச் சென்ற அத்தான், எங்களை அடியோடு மறந்தார்—காரணம் தெரியமுடியவில்லை அத்தைக்கு உடல் நலம் குறைந்தது—உயிர் ஊசலாடும் நிலையிலிருந்தது—செய்தி அனுப்பினோம். வர இயலவில்லை என்றசெய்திதான் வந்தது. அத்தை இறந்தாள். நான் அனாதையினும் அனாதையானேன், ஆனால் என் உள்ளத்தே ஏதோ ஒருஆசை; அத்தானைப்பார்க்கவேண்டுமென்று புறப்பட்டுச் சென்றேன் அங்கு ......

## காட்சி 6

[குணசேகரன் பாடிக்கொண்டிருக்கிறான். சித்ரலேகா நடனம் ஆடிக்கொண்டிருக்கிறாள்.]

[குணவதி உள்ளே நுழைந்து.]

குணவதி:- உயிருடன் ஊசலாடிக் கொண்டிருந்த தாயைப் பார்க்க வர இயலாததற்கு இதுதான் காரணமோ?

சித்ரா:- ......யார் நீ?

குணவதி:- அதைக்கேட்கும் நீ யார்?

குணசே:- குணவதி...... நீ ஏன் இங்கு வந்தாய்...

குணவதி:- அந்தக் கேள்வியைக் கேட்கும் உன் உள்ளத்தைத் தொட்டுப் பார்—பிறகு கேள்—காவியத்தில் கரைபடா ஓவியமே என்றீரே—அதே ஓவியம் வந்திருக்கிறேன்—புகை படிந்த ஓவியமாக, மாசற்ற மதிமுகத்தாளே என்றீரே—அதே மதிமுகத்தாள்தான் வந்திருக்கிறேன். ஆனால் சோகம் என்னும் மேகம் மறைத்திருக்கிறது — எங்கே தெரியப்போகிறது; உங்கள் கண்களை மோகம் என்னும் மேகம்தான் மறைக்கின்றதே...

குணசே:- குணவதி என்னஉளறுகிறாய்...

குணவதி:- ஆமாம் நான் உளறத்தான் செய்கிறேன்...... இதை நீங்கள் மட்டும் சொல்லவில்லை —எல்லோரும் இதைத்தான் சொல்கிறார்கள்.

அன்பின் பெருக்கிலே, காதலியின் அரவணைப்பிலே இருக்கும்போது, காதலி என்ன சொன்னாலும் அவைகள் அஞ்சுகம் பேசும் கொஞ்சு மொழிகள் — அதே

காரிகை கசக்கப்பட்டு, நலிந்த ரோஜாவின்நிலைக்குவந்தவுடன், அவள் உண்மையைச் சொன்னாலும்—உளறுதல்--என்றுதான் சொல்கிறீர்கள்... அத்தான்—உங்களைச் சொந்தம் கொண்டாடும் இவள் யார்?

சித்ரா:- ஆ! என்னையா கேட்கிறாய்—கண்மணியைநோக்கி யார் என்று கேட்கும் மாதவியே நீ யார்?

குணவதி:- ஐயோ! என் கண்மணியே... ஏற்கெனவே காதலிக்கப்பட்ட ஒருவனை கண்மணி மணக்கவில்லையே!

சித்ரா:- ஆ......என்ன திமிர்...... பரத்தையே இங்கிருந்து போ...

[என்று கன்னத்தில்அறைய—அவள் கீழே விழுந்துவிட — சித்ரா அவனை இழுத்துக்கொண்டு சென்றுவிடுதல்]

சித்ரா:- வாருங்கள்... நாம் போகலாம்.

## காட்சி 7

இடம்:- இளம்பரிதிக் கோட்டம்.

குணவதி:- அப்படி அன்று துரத்தப்பட்ட நான் உயிர் வாழ வழியில்லை என்று ஆற்றில் விழுந்துவிடலாம் என்று சென்றேன்—அப்போதுதான் என்னை...

கருணா:- பெண்ணே-அதற்குமேல் எனக்குத் தெரியும். இனிக் கவலைப் படாதே — நான கவனித்துக் கொள்றேன் — எல்லாம் இனிதே முடியும்.

[சில நாட்களுக்குப் பிறகு.]

விமலன்:- முனிவரே! தங்களை தந்தை சிறிது நேரம் இங்கு அமருமாறு சொன்னார்.

பரஞ்:- விமல அப்படியே! குணசேகரனின் உடல் நலன் எவ்வாறு இருக்கிறது.

விமலன்:- முனிவரே! இன்றுதான் அவன் கண்கட்டுகளைப் பிரிக்கப் போகிறார் தந்தை!

பரஞ்:- நல்லது விமல... இன்னும் குணசேகரன் சித்ராவின் நினைவாகத்தான் இருக்கிறான்!

விமல:- ஆம் முனிவரே! அதைத்தான் எங்களால் பார்க்கவோ அல்லது சகிக்கவோ முடியவில்லை—அவன் சித்ரா என்று அழைக்கும்போதெல்லாம்—குணவதி, சித்ராவைப்போல்—அத்தான என்று பணிவிடைகள் செய்கிறாள்—அவன் சித்ரா என்று நினைத்துப்பேசும் காதல் மொழிகள் அவள் நெஞ்சத்தை ஈட்டிகொண்டு பாய்ச்சுவதுபோலிருக்கிறது-அவள் அழுகிறாள்; ஆனால் தான் குணவதி என்று மாத்திரம் சொல்லிக்கொள்ளவில்லை......

பரஞ்:- அந்தோ... பரிதாபம்...

[அப்போது கருணானந்தர் வந்து]

கருணா:- முனிவரே! வணக்கம். காலம் கழித்து வந்தமைக்கு மன்னிக்கவேண்டும்.

பரஞ்:- கருணானந்த—மனிதனை மனிதன் மன்னிக்கும் இயல்பு இன்னும் நம் நாட்டில் உலவுதல் கூடாது. நான் யார் உன்னை மன்னிக்க — அல்லது நீதான் யார் என்னிடம் மன்னிப்புக் கேட்க?

கருணா:- முனிவரே! என்ன இது-விந்தையான கேள்வியாக அல்லவா இருக்கின்றது--முப்பத்து முக்கோடி தேவர்களும் போற்றும் பிரம்மனின் குலமான அந்தணர் குலத்தில் தோன்றியவரல்லவா நீங்கள்.

பரஞ்:- கருணானந்தா என் ஏளனம்? தெரிகிறது நீசொல்வதிலிருந்து நாங்கள் இவ்வளவு நாட்களாக ஆடின ஆட்டத்தைச் சொல்கிறீர்கள் — ஆடினோம் அப்படித்தான்—இனி முடியாது? முகச்சாயம் வெளுத்துவிட்டது--உள் நிறம் தெரிந்துவிட்டது. இனி நீ, நான் யாவரும் ஒன்றுதான்.

கருணா:- முனிவரே! அதுவேநன்று; ஒன்றே குலம் ஒருவனே தேவன்—அதுவே போதுமானது.

[அப்போது குணசேகரன் இருவருக்கும் தெரியாமல் பின்னால்வர]

பரஞ்:- கருணானந்தா! குணசேகரனின் நிலை எவ்வாறு இருக்கிறது.

கருணா:- அவனுக்கு இன்றைய தினம் பார்வைகிடைத்துவிடும், ஆனால்...

பரஞ்:- ஆனால் என்ன.

கருணா:- அவன் இன்னும் சித்ராவின பைத்தியமாகத்தான் இருக்கிறான்--முனிவரே அவனை ஒரு முறையாவது இங்கு வரச் சொல்லமுடியுமா...

பரஞ்:- அவனை வரவழைப்பதா?... அவள் எங்கே இருக்கிறாள்? அவள்தான் இறைநெய்தி விட்டாளே?

கருணா:- ஆ......என்ன இறந்துவிட்டாளா...

குணசே:- சித்ரா... சித்ரா... (தடுமாறி ஓடிவந்து) அவள் எங்கே இருக்கிறாள் — அவள் எங்கே புதைக்கப்பட்டிருக்கிறாள்? சித்ரா நீ மறைந்து விட்டாயா? ஐயோ குருவே! அவள் எப்படி இறந்தாள்.

பரஞ்:- குணசேகரா! பொறு சொல்வதைக் கேள்! நீ கண்பார்வை இழந்தவுடன் அவள் உன்னை மறந்தாள்? — உன்னை வஞ்சித்தாள்?

குணசே:- இல்லை இல்லை, ஒருக்காலும் இருக்காது — இருக்கவே முடியாது?

பரஞ்:- குணசேகரா! கேள்! பொறுமை வேண்டும் — குருட்டனைக்கணவனாகஏற்றுக்கொள்ள நான் பைத்தியக்காரி அல்ல என்று எல்லோரிடமும் சொன்னாள்—கல்வி முடிந்ததும்அழகாபுரிக்கு திரும்பினாள்—தனியாக அல்ல—காதலன் இன்பசாகரனோடு.

குணசே:- ஆ...என்ன? காதலன் இன்பசாகரனா...அடிநயவஞ்சகி!

பரஞ்:- கேள் அவனும் காதலிப்பதுபோல் நடித்தான்—ஆண்கள்தான் வண்டினம் ஆயிற்றே—இம்மலரில் தேனுள்ளவரை சுற்றி ரீங்காரம் செய்தான்—பிறகு அதே கன்னிமாடத்தில் அவள் தங்கை, புத்தம் புதிய மலர். அவனை நாடினான்—இது தெரிந்துவிட்டது சித்ராவுக்கு. எரிமலைபோல் கோபம்மூண்டது தன் காதலன் எப்படி மற்றொருவளைக் காதலிக்கலாம். அவனை உயிருடன் வைத்திருக்கக் கூடாது என்று கிளம்பினாள்—இதையறிந்த மரத்தில் பழம் இருக்கும் வரை இம்மரத்திலே இருந்து பிறகு (அடுத்த மரத்துக்குத் தாவும் மந்தியைப் போன்றவனே) உன்னை என்ன செய்கிறேன் பார்-என்றுஅவள் கிளம்பினாள். முடிவு — இரண்டு பிணங்கள்—ஆனால் இருவரின் கொள்கைகளையும கண்டு சிரிக்கிறது உலகம்......

கருணா:- முனிவரே......நான் அப்போதே சொல்லவில்லையா!

அந்தி (எதிர்காலம்) சிரிக்கும் என்று...

குணசே:- நயவஞ்சகி! நடமாடும் கருநாகமே—உன்னை அடித்துத் தான் சாகடிக்கவேண்டும்—தந்தையே அப்படியென்றால் எனக்கு பணிவிடை செய்யும் அவள் யார்...

கருணு:- அவள் பெயர்...

குண:- சொல்லுங்கள் தந்தையே சொல்லுங்கள் — அவள்தான் என் தெய்வம் சொல்லுங்கள்...

கருணு:- அவள் குணவதி...

குணசே:- குணவதி...குணவதி...

கருணு:- குணசேகரா ஓடாதே!

## காட்சி 8

இடம்:- இளம்பரிதிக்கோட்டம்

[குணசேகரன் கண்கட்டுகளை அவிழ்த்த பிறகு]

குண:- தந்தையே — கண்கள் திறந்தன ஆம் தந்தையே புறக்கண்களைச் சொல்லவில்லை— அகக்கண்களும் இன்றுதான் தெரிந்தது...குணவதி நான் பாபி...உன் அன்பை எவ்வளவோ சோதித்துவிட்டேன்— இனி நீதான் என் அன்பின் பிம்பம்! முனிவரே! இன்றுதான் தெரிந்துகொண்டேன்! கடலிலே மூழ்கித்தான் முத்துக்கள் எடுக்கமுடியும். அதுபோல் துன்பக் கடலிலே மூழ்கித்தான் உண்மையான அன்பைத் தெரிந்துகொண்டேன்! உண்மை அன்பை வாய்ச்சொல் வெளிப்படுத்தாது— சேவைதான் வெளிப்படுத்தும்...

குணவ:- அத்தான்.....அப்படியென்றால் சித்ரா!

குணசே:- ஏன் ஏளனம் செய்கிறாய் கண்ணே! அதோ பார்! முல்லை இதழ்விரித்து, பூங்கொடி ஆடுகின்றது...ஏன்தெரியுமா! அவைகள் சிரிக்கின்றன! அழகுக்காக கணவன் கணவன் என்றுசொல்வோரைப்பார்த்து சிரிக்கின்றன...

குணவ:- அழகுக்காகக் கணவன் என்ற பண்பைக்கண்டு அந்தி சிரித்தால்...அன்புக்காக கணவன் என்ற கொள்கைக்கு...

குணசே:- வையகமே எப்போதும் வாழ்த்துகிறது.

8-ம் பக்கத் தொடர்ச்சி

வருகிறது. அமெரிக்காவும், ரஷ்யாவும் வான் வெளியில் செயற்கைச் சந்திரன்களையும், ராக்கெட்டுகளையும் சுற்றவிட்டுக்கொண்டிருக்கிறது. இந்தியா கைராட்டையையும், தக்ளியையும் சுற்றவிட்டுக் கொண்டிருக்கிறது. முன்னேற்றம் எங்கே? எண்ணிப்பார்க்க வேண்டும்.

உலகம் ஒவ்வொருநாளும் முன்னேறிக்கொண்டே வருகிறது. நாமும் அம்மாதிரி முன்னேற வேண்டுமானால் பழைமையை ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. நவீன சாதனங்களின் அவசியத்தை உணர்ந்து அதற்கேற்ற வகையில் கல்வித் திட்டங்களையும், கைத்தொழில்களையும் அமைக்கவேண்டும். கல்வித் திட்டத்தினால் எதிர்கால மக்கள் — வருங்கால மக்கள் — பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றமடைந்தவர்களாக விளங்க வேண்டும். ரூ. 100/- மதிப்புள்ள பவுனை நகைகளாகச் செய்தால் அதன் மதிப்பு ரூ. 100/-ம் அதற்கும்குறைவாகவும்தான் இருக்கும். ஆனால் ரூ. 100/- மதிப்புள்ள இரும்பை எடுத்துக்கொண்டு மோட்டார்இயந்திரமோ, சைக்கிள் பாகங்களோ, கெடிகாரப் பாகங்களோ செய்தால்ஆயிரக்கணக்கில் பணம் குவிந்துவிடும். இவ்வளவு தொகையையும் மேலை நாட்டினரால் எப்படிக் காணமுடிந்தது. ஆதாரக் கல்வி பயின்றதனாலா? அல்ல அல்ல! ஆராய்ச்சி. அதன் பலனாக ஏற்பட்ட விளைவினால் தான் மக்கள் முன்னேற்றம் அடையமுடிந்தது. ஆதாரக் கல்விக்கும் நூற்புக்கும் என்று இலட்சக் கணக்கில் செலவாகும் தொகையைக்கொண்டு இயந்திர சம்பந்தமான தொழில்களைச் செய்தால் இதுவரை எவ்வளவோ முன்னேறியிருக்கலாமே? இன்றைய தினம் உலகில் உள்ள மிகச் சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் முன்னேறிவருவதற்குக் காரணம் அங்குள்ள சூழ்நிலைக்கேற்ப அமைந்துள்ள கல்வித்திட்டம் தான், என்பதை அறியும் போது உண்மையிலேயே பெருமைப்பட வேண்டியிருக்கிறது.

ஆகவே வருங்காலம் சீரும், சிறப்புமாக விளங்கவேண்டுமானால் கல்வித் திட்டத்திலே மாறுதல் இருக்கவேண்டும். பழைமையைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். சுதேசி மனப்பான்மையும் குறையவேண்டும். முன்னேற்றமடைந்த நாடுகளின் வரலாற்று ஓவியத்தைப் படித்து நாமும் திருந்திக்கொள்ள வேண்டும். இயந்திரத்தொழிலுக்குமுக்கியத்துவம் கொடுக்கவேண்டும். குறிப்பாக ஆதாரக்கல்வித் திட்டத்தை அறவே மாற்றிஅமைக்க வேண்டும். இப்படிச் செய்தோமேயானால் பல துறைகளிலும் உள்ள நிபுணர்களையும், மேதைகளையும் உலகுக்கு அறிமுகம் செய்து வைக்க முடியும். இந்திய உப கண்டமும் குறிப்பாகத் திராவிட நாடும் முன்னேற்ற நாடுகளின் பட்டியலிலே முதலிடம் பெறும்.

★

நாம் ஒரு விஷயத்தை யாரிடமும் மறைத்து வைத்துவிடலாம், யாரையும் ஏமாற்றியும்விடலாம். ஆனால் ஒருவன் தன் மனைவியை நிரந்தரமாக ஏமாற்ற முடியாது. ஒரு விஷயத்தை அவளிடம் நிரந்தரமாக மறைத்துவைத்துவிடவும் முடியாது. கணவன் மனைவி இருவருக்கிடையே உண்மை அறியும் ஒரு பெருஞ்சக்தி நிலவுகிறது. இதுதான் வேறு எந்த இருவருக்கும் உலகில் ஏற்படாத ஒரு நெருக்கம். இந்த நெருக்கம் கணவன் மனைவியரிடையே எந்த இரகசியத்தையும் விட்டு வைப்பதில்லை.

# நேருவின் மேரு!

**சி.என். அண்ணாதுரை**

**பண்டிதநேரு** மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிய அறிவிப்பை வெளியிட்டுவிட்டார். இத்தகைய அறிவிப்பைப் பொது மக்கள் ஏற்கனவே எதிர்பார்த்திருந்ததால், இதனைக்கண்டு ஆச்சரியப்படவில்லை. மேல்நாடுகளில் நடைபெறுவது போலவே, இங்கும் பண்டிதநேரு அவர்கள் தொடர்ந்து திட்டங்கள் தீட்டுவதில் ஆர்வம் காட்டிவருவதால், இன்னும் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்பட இருக்கின்றனவென்பதை முன் கூட்டியே பொது மக்களுக்கு அறிவிக்கக் கூட அவருக்கு அவகாசம் இல்லை.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய அறிவிப்பைக் கண்டு ஆச்சரியப்படாவிட்டாலும், அந்த அறிக்கையில் காணப்படுகின்ற கோபக்குறிகளைப் பார்க்கும் போதுதான் வியப்படைய வேண்டியிருக்கிறது.

''மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவது மிக மிக அவசியம். நாட்டின் முன்னேற்றத்திற்காக வகுக்கப்பட்டிருக்கும் இந்தத் திட்டத்தைப் பற்றிக் கேள்விகளோ சந்தேகங்களோ எழக்கூடாது. சந்தேகங்கள் எழுந்தாலும், அவைகளை வெளியிடுவது மகா பாபம்! அவைகளை வெளியிடுபவர்கள் வெறுத்தொதுக்கப்படவேண்டியவர்கள்! இதற்கு முன் நிறைவேற்றப்பட்டிருக்கும் திட்டங்களின் பலாபலன்களைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள் என்று கேட்பது இராஜ துரோகம். நிபுணர்கள், திட்டங்கள் நிறைவேறக் கூடாது என்ற நோக்கத்துடனேயே திட்டங்களைப்பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். அத்தகைய நிபுணர்கள் எத்தகைய அரசியல் தொடர்பு கொண்டுள்ளவர்களாஞலும், புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள். திட்டங்கள் தீட்டப்படுகின்றன, அவைகளைப்பற்றி, பொதுமக்களின் எண்ணங்களைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை'' பண்டிதநேரு அவர்களின் போக்கு இப்படி அமைந்திருக்கிறது.

கடந்த பத்தாண்டு காலமாகப் பொது மக்களின் எண்ணங்களைக் கேட்காமல், மனம்போன போக்கில் இருந்துவிட்ட அவருக்கு, மக்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஏன் தோன்றவேண்டும்? மக்களின் எண்ணங்களைத் தெரிந்து நடந்துகொள்ளவேண்டும் என்று இப்போது அறிவுறுத்த யாருக்காவது தைரியம் வருமா? நிச்சயம் வராது!

மக்களால், மக்களுக்காக ஜனநாயக ஆட்சி அமைந்திருக்க வேண்டும். அந்த ஆட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஒரு திட்டத்தை வெளியிடுகிருர்; அதைக் கேட்டு நாட்டு மக்கள் திருப்தி அடையவேண்டிய நிலை இங்கு உள்ளது. தட்டிக் கேட்க ஆள் இல்லை என்ற நிலை நீடிக்குமானல், ஜனநாயக ஆட்சிமுறைகளுக்கே ஆபத்து நேரிடக் கூடிய வாய்ப்புகள் உருவாகும். ஜனநாயக ஆட்சி முறையில் ஏற்பட்ட கோளாறின் விளைவாக, அயூப்கான் தோன்றியதுபோலப் பல உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும்.

துதிபாடுபவர்கள், பண்டிதநேரு சொல்லுபவைகளையெல்லாம் மக்கள் கேட்டுத் தீரவேண்டும் என்பதற்காகப் பல காரணங்களைக் காட்டுகிருர்கள். ஆனல், தங்களுக்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்ற எண்ணத்தினல், அவைகளைப்பற்றிய கருத்துக்களை தெரிவிக்க விழைகின்றனர் மக்கள்.

பிழை நேரிடுதல் இயற்கை என்னும் உண்மையைப் பண்டிதநேரு ஒப்புக்கொள்ள மறுக்கிருர். அரசியலில் உச்சநிலை அடைந்துவிட்டதாலேயே, தாம் நினைப்பவைகள்தான் சரி என்று அவர் நினைத்துக் கொள்ளுவதில் பொருளே இல்லை. மிகச் சாமான்யர்கள்கூட, அவர்களுடைய நன்மைக்காகத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்ற காரணத்தால், அவைகளைப்பற்றிய யோசனைகளைச் சொல்ல இயலும் என்று பண்டிதநேரு உணரத் தவறுகிருர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு இடையூறுகளுக்கிடையே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது! அதுமட்டுமில்லாமல், இந்தத் திட்டம் என்னென்ன கேடுகளை விளைவிக்குமோ என்று

கூடப் பல சமயங்களில் எதிர்பார்க்கப்பட்டது. அமெரிக்கா போன்ற பல நாடுகளின் பேருதவி குறித்த காலத்தில் கிடைக்காமல் போயிருந்தால்கூட, இந்தத் திட்டம் நிறைவேறாமலேயே போயிருக்கும்; அதோடு ஆட்சியாளர்களின் மானமும் பறிபோயிருக்கும். இவ்வளவு இன்னல்களுக்கிடையே நிறைவேற்றப்பட்ட இந்தத் திட்டத்தினால், எதிர்ப்பார்த்த பலன் கிடைத்துவிட்டது என்று யாரும் சொல்லக்கூடிய நிலை இல்லை.

"நீங்கள் தவறுதலாக கணக்குப்போடுகிறீர்கள்; திட்டங்கள் நேர்மையாக வகுக்கப்படவில்லை; திட்டங்களை நிறைவேற்றக் கையாளும் முறைகளில் பணம் பாழாக்கப்படுகிறது!" திட்டத்தை நிறைவேற்ற உதவியளிக்க முன வந்த அத்தனை நாடுகளும் இத்தகைய எச்சரிக்கைகளை அனுப்பிய வண்ணமிருந்தன. திட்டம் பயனளிக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு உதவி அளிக்க முன்வாராத நாடே இல்லை என்று கூடச் சொல்லலாம். இருந்தபோதிலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் எதிர்ப்பார்த்த பலன் கொடுத்ததா? பண்டித நேருவே கூட முழுப்பலன் கிடைத்துவிட்டது என்று சொல்ல முடியாது. திட்டத்தை நிறைவேற்றியதில் ஒரு சில குறைகள் இருந்தபோதிலும் பொதுவாக நாம முன்னேறுகிறோம் என்று மட்டுமே பண்டித நேரு சொல்லக்கூடும்.

கோயில்கள் எனக் கூறத்தகும் தொழிற்சாலைகள் நித்த நித்தம் எழும்பியவண்ணமிருக்கின்றன; காட்டாறுகள் பயனபடுத்தப்படுகின்றன; கிராமங்கள் புத்துயிர் பெற்று எழுகின்றன. நாடு புதுப் பொலிவுடன காணப்படுகிறது. இத்தகைய வளர்ச்சிகளை, திட்டங்களின் வரவு செலவு கணக்குப் புள்ளி விவரங்கள் காட்டாது; நாட்டு மக்களின் முகங்களே நிலைமையை நன்கு விளக்கிவிடும். பண்டித நேரு, இந்த நாட்டின் சிறப்பை விளக்க விரும்பும் கற்பனைக்காட்சி இது. அத்தகைய சிறப்புகளை நாடு பெறவேண்டும் என்று அவர் விரும்புகிறார் எனபதை நாம மறுக்கவில்லை. அப்படி விரும்புபவர், தன் நிலையிலிருந்து தன்னைச் சிறிது தாழ்த்தி, குடிசைகளில் அடைபட்டு, பட்டினியால் வாடும் ஏழைகளைப் பார்க்க முயலவேண்டும். ஏழை எளியவர்களுக்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன; அவர்கள் தரும யோசனைகளையும் திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும என்ற எண்ணம் அவருக்குத் தோனறவேண்டும். அதற்கு மாறாக, எண்ணங்களை வெளியிடும மக்களின் மீது, கோபக்கனல் கக்குவது, நியாயமானதுமல்ல, ஜனநாயக முறைக்கு உகந்ததுமல்ல.

திட்டங்கள் நேர்மையானவர்களால் தீட்டப்படுகிறது என்றாலும்கூட, அவர்கள் மக்களுடன் தொடர்புகொண்டவர்கள் என்று சொல்ல முடியாது. விமான மூலம் நிலங்களைப் பார்வையிட்டு, விவசாய முன்னேற்றத்திற்கான திட்டங்களைப் போடுதல், 'பைல்'களைப் புரட்டி, தொழில் துறையை இயந்திரமயமாக்குவதற்கான முடிவுகளை எடுத்தல், ஆகிய இத்தகைய செயல்கள், திட்டங்களை தீட்டுபவர்களுக்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றன. மேலும், அவர்களால் எடுக்கப்படும் முடிவுகளால், கோடிக்கணக்கான மக்களின் வாழ்வு பாதிக்கப்படுகிறது என்பதையே மறந்துவிடுகிறார்கள். திட்டங்களை வகுப்பவர்கள் மேதைகள்; ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்; ஆனால், மக்களின் சுகதுக்கங்களை அறிந்துகொள்ளமுடியாத தொலைவிலும், மக்களின உண்மை நிலையை அறிந்துகொள்ள விரும்பாத நிலையிலும் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

திடீரென்று திட்டங்களைப் பற்றிய அறிவிப்புகள் அறிவிக்கப்படுகின்றன. திட்டங்களைப்பற்றிப் போதுமான விவாதங்கள் நடைபெறுவதில்லை. திட்டங்களைத் தீட்டுபவர்கள், அவர்கள் தரும் திட்டங்களைநிறைவேற்ற மக்களின் ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கினறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பதற்குநேர்மாறாக, கண்ணீரையும் புலம்பலையையும் மக்களுக்குக் காணிக்கையாக்கு வதைக் கண்டு கோபப்படுகிறார்கள்.

"உணவு உற்பத்தி பெருகிவிட்டது; தொழில் துறையில் முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது; நாட்டின் நலிவைப் போக்குவதற்காக எடுக்கப்பட்ட திட்டங்கள், பலனளிக்கத் துவங்கியுள்ளன." இவ்வாறு அரசாங்க அலுவலர்கள், திட்டக்காவலர்களின் தூண்டுதலின் பேரில் அறிக்கைகள் வெளியிட்ட வண்ணமிருக்கின்றனர். இத்தகைய அறிக்கைகளைத்தான, திட்டங்கள் வாழ்வளிக்க வழிகோலும் என்று எதிர்பார்த்து, பட்டினியால் வாடிடும் மக்களைக் காண முடிகிறது.

ஜனநாயக ஆட்சியில் எந்த விஷயமும் விவாதிக்கப்பட்டபிறகு தான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். திட்டங்களின மீது எழும் நியாயமான சந்தேகங்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டால்தான் திட்டங்கள் மக்களுக்குப் பயனுள்ளதாக அமையும். முறையான ஜனநாயக ஆட்சியில், திட்டங்களை மக்களே தீட்டுவதற்கு வாய்ப்புகள் தரப்படவேண்டும். மக்கள் கொடுக்கும் திட்டங்களை ஆட்சியாளர்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும். புள்ளி விவரங்களைக்கொண்டுமக்களால், திட்டங்களைக் காகிதத்தில் எழுதிக்காட்ட முடியாதென்றாலும், தேவைகளையும், அவைகளை எப்படிப் பெறுவதென்பதையும் அவர்களால் சொல்ல முடியும். மக்களுடைய ஒத்துழைப்பின்பேரில் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்குமானால், தீட்டியவர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட பல மாபெரும் தவறுகள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஆட்சியாளர்கள், தொழில்வளம் பெருகவேண்டுமென்பதே திட்டங்களின் நோக்கம் என்று நாள் தவறாமல் எடுத்துச்சொல்லி வருகிறார்கள். இவர்களுடைய கூற்றை ஆராய்ந்து பார்த்தால் உண்மை நிலை விளங்கும். தற்போது தொழில்துறை, ஒரு சில தொழிலதிபர்களின் வேட்டைக் காடாக இருக்கின்ற காரணத்தால், பொருளாதார ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. பெரும் பணம் படைத்தவர்களுடைய ஆதிக்கத்தில் தொழில் நிறுவனங்களை விட்டுவிடாமல், தொழிலாளர்களுக்கும் அவைகளில் உரிமை வழங்கப்பட்டால்தான், பொருளாதார ஏற்றத்தாழ்வு நீங்கும். அந்த வகையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் எவ்வாறு பயன்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். தொழில்வளம் பெருகி இருப்பதற்கு அறிகுறியாக 'கெடிலாக்' மோட்டார் கார்கள் பாதையில்

நடமாடிக்கொண்டிருக்கின்றன; அதே சமயத்தில் தொழிலாளிகள் பசியாலும், பிணியாலும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக்காட்சிகள், நாட்டின்முன்னேற்றத்தைக்காட்டுகின்றன என்பதில் பொருளே இல்லை.

தொழில் முன்னேற்றத்தை ஒட்டியே, சுகாதாரம், குடியிருப்பு வசதி போன்ற பல பிரச்சனைகள் எழுகின்றன. இந்தப் பிரச்சனைகளையாவது தீர்க்க முடிந்திருக்கிறதாவென்றால், அதுவும் இல்லை என்று அமைச்சரே கூறுகிறார். "நம் நாட்டில் இயற்றப்பட்டிருக்கும் சட்ட திட்டங்கள், மேல் நாடுகளில் வழக்கிலிருந்து வருகின்ற சட்ட திட்டங்களை ஒத்திருக்கின்றன. நம் நாட்டில் அவைகளை நிறைவேற்றுவதற்குப்போதுமான அரசாங்க அலுவலர்களும், அதற்கென்று ஒரு அமைபபும் கிடையாது. ஆகவே திட்டங்கள் தீட்டப்பெறுவதின் நோக்கம் நிறைவேறுவதில்லை." அமைச்சர் திரு. நந்தா அவர்கள் இப்படி ஒப்புக்கொண்டபிறகு, பொது மக்களிடம் ஆர்வம் எங்ஙனமிருக்க முடியும்?

தொழில் துறையில் எழுகின்ற மற்றொரு பிரச்சினையில், அரசினர் அக்கரைகாட்ட விரும்புவதில்லை. ஓர் புறம், தொழில் துறையில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் காணப்படுகிறது, என்று அரசினர் அறிக்கைகளை விடுத்துக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் ம்ற்றொரு புறம் வேலையில்லாக் கொடுமை வளர்ந்து கொண்டே வருகின்றது. ஆளும் கட்சியினர் இந்தப் பிரச்சினையில் முக்கியகவனம் செலுத்தத் தவறுகின்றனர். "இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், மக்களுக்கு அதிக வேலை கிடைக்கச் செய்வதே.' என்று இப்படி வக்காலத்து வாங்கிக்கொண்டு வாய்வலிக்கக் கத்தினார்கள் பலர். ஆனால், திட்டம் ஆரம்பித்த இரண்டு ஆண்டிற்குள்ளாகவே, எண்பது இலட்சம் பேருக்குவேலை கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்க முடியாது என்று தெரிந்துவிட்டது. மேலும், மூன்றாண்டுகள் கழிந்த பின்னரும், வேலையில்லாக் கொடுமை வளர்ந்து வருவதைத்தான் காணமுடிகிறது. வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 630 இலட்சமாக் வளர்ந்துவிட்டதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. வேலை தேடிக்கொடுக்கும் நிலையங்களில், வேலை கேட்போரின் எண்ணிக்கை 1957 ஆகஸ்டில் 828 653 ஆக இருந்தது, 1958 ஆகஸ்டில் 1,128,741 ஆக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வு எதைக் காட்டுகிறது?

வேலையில்லாக்கொடுமை நகரங்களில் மட்டும் நிலவுகிறது என்று சொல்ல முடியாது. வேலை இல்லை என்ற குரல் கிராமப்புறங்களிலேயும் எழுகின்றது. கிராமங்களில், வேலை இல்லை என்ற குரல் மட்டுமில்லாமல், வேலைக்கேற்ற ஊதியம் கொடு என்ற குரலும் கேட்கின்றது.

"நவீன சாகுபடி முறைகள் கிராமங்களில் புகுத்தப்பட்டிருக்கின்றன; சிறுசிறு தொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன; குடிசைத் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றன" என்றெல்லாம் சர்க்கார் தரப்பில் சொல்லப்படுகிறது. அரசினர் கூற்றுப்படி, கிராமங்கள் புதிய மெருகுடன அல்லவா காட்சியளிக்க வேண்டும்? அதற்கு மாறாக வேலையில்லாக் கொடுமையல்லவா அங்கே தாண்டவமாடுகிறது. அரசினர் "நாங்கள் கிராமங்களுக்கு இதைச் செய்தோம், அதைச் செய்தோம்" என்று மாநாடுகளில் வாதாடினார்களே தவிர, மக்களின் அவலநிலைமையை மாற்றியதாகவே தெரியவில்லை. இந்நிலையில் அரிய சாதனை புரிந்துவிட்டதாகவேறு இத்தாப்புக் கொள்ளுகிறார்கள்! சாதனைகளைப் பாராட்டுவதால் மக்கள் வெற்றிப் பாடல்கள் புனைந்து துதிபாடுவார்கள் என்று கூட ஆளவந்தார்கள் எதிர்பார்க்கிறார்கள்!

திட்டங்கள் அடுத்தடுத்துத்தீட்டப்படுகின்றன. அவைகளை நிறைவேற்ற முற்படும்போது பலனளிக்காது போய்விடுமோ என்ற அச்சத்தால் பல மாறுதல்கள் செய்யபபடுகின்றன. இப்படிப் பல கட்டங்களில் பணம் வீணாகச் செலவு செய்யப்படுறது. இந்நிலையில் ஊருக்குச் செய்யும் உபதேசமோ விசித்திரமானது.

"சாப்பிடுவதைக் குறைத்துக் கொள்ளுங்கள்; உழைத்து உழைத்து உற்பத்தியைப் பெருக்குங்கள். நாங்கள் தரும் புள்ளி விவரங்களைக் கண்டு திருப்தி கொள்ளுங்கள்." இந்தப் பிரச்சாரம் பத்து ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. மக்களும் சொனனபடியெல்லாம் கேட்டார்கள். ஆயினும் அவர்களுடைய நிலை இனனும் உயரவில்லை என்பது நன்கு தெரிகிறது. குறைபாடுகள் உள்ள திட்டங்களால், நன்மை ஏற்படாது என்பதை உணர்ந்து, குறைபாடுகளை அகற்ற முயலவேண்டும்.

உணவுப்பிரச்னையைமுறையாகக் கையாளுவதில் அரசினர் தவறிவிட்டனர்.

நாட்டில் மல பகுதிகளுக்கிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. ஆகையால் தனிநாடு வேண்டும் என்று கேட்கத் துணிவு கொள்ளாதவர்கள்கூடத்தென்னகத்தின் உரிமையைக் கேட்க முற்பட்டிருக்கின்றனர்.

அந்நிய செலவாணி விஷயத்தில் நெருக்கடி தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது.

அத்தியாவசியமான பொருள்களை மக்களுக்குத் தேடிக்கொடுக்க வேண்டுமே என்ற எண்ணமே இல்லை.

அரசினரிடம் வேறு எந்தச் சாதனையைச் சுட்டிக் காட்டிட முடியுமோ தெரியவில்லை? எதைத்தான்சாதித்துவிட்டார்களென்று சொல்லொணாத் துயரங்களுக்குட்பட்டிருக்கும் மக்கள் கேட்காமலா இருப்பார்கள்!

நாம் ஒன்றை மட்டும் வலியுறுத்திக் கூறமுடியும். மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவிந்திருக்கும் வரையில் கோடிக்கணக்கில் செலவு செய்து நிறைவேற்றப்படும் திட்டங்கள் பலனளிக்கப் போவதில்லை. திட்டங்கள் டில்லியில் தீட்டப்படுவது நிறுத்தப்பட்டு, மாநிலங்களில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். டில்லி சர்க்கார் ஒரு மாநிலத்திற்கும், இன்னொரு மாநிலத்திற்கும் தொடர்பு ஏற்படுத்துகின்ற வகையில் இயங்கவேண்டுமேதவிர, திட்டங்களைப் போடுவதற்கும், நிதியைப் பங்கீட்டுக்கொடுப்பதற்கும் அதிகாரங்கள இருக்கக்கூடாது. மாநிலங்களுக்கு, திட்டங்களைத் தீட்ட அனுமதி கொடுக்கப்பட

டால்தான், பலன் தரத்தக்க வகையில் திட்டங்கள் அமையும். டில்லியில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தரப்பட்டால்தான், அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ற திட்டங்களை ஆங்காங்கு கிடைக்கக்கூடிய வசதிகளைப் பொறுத்து அமைத்துக் கொள்ள முடியும். மாநில அமைச்சர்கள் தேவைகளைப்பற்றி எடுத்துச் சொல்ல அவ்வப்போது டில்லிக்கு அழைக்கப்படுவதும், பிறகு டில்லி உத்தரவை அமைச்சர்கள் எதிர்பார்த்துக்கொண்டுஇருப்பதுமான நிலை இருக்கக்கூடாது.

சிறிது காலத்திற்கு முன்பு பண்டித நேரு அவர்கள், பிரமாண்டமான தொழில்களின் பேரில் உள்ள மோகத்தைக் கண்டித்திருக்கிறார். அதைப் பார்க்கிறபோது அவருடைய சிந்தனை நல்ல பாதையில் செல்லுகிறது என்று நாமெல்லாம் மகிழ்கிறோம். அவருடைய சிந்தனை தொடர்ந்து அவ்வழியிலேயே செல்லுமாயின் இன்று அமைக்கப்பட்டிருக்கின்ற இந்திய சர்க்கார், அரசியலில் பிரமாண்டமானது என்ற சரியான முடிவுக்கு அவரைக் கொண்டு வந்துவிடும். பொருளாதாரத் துறையில் எவை எவை பிரமாண்டமானதாக நேருவின் கண்களுக்குத்தெரிகிறதோ, அரசியலிலும் அவ்வாறே அவருக்குத் தோற்றமளிக்கிறது. பிரமாண்டமாகக் காணப்படுகின்ற எதுவும் அச்சத்தை உண்டாக்குகிறது; ஆசையைத்தருவதில்லை. ஆகவேதான் மக்களுடைய ஒத்துழைப்பையும், ஆர்வத்தையும் பண்டித நேரு அவர்கள் காணமுடியவில்லை. பிரமாண்டமாகக் காட்சியளிக்கின்ற இந்திய சர்க்காரிடம் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை மாநிலங்களுக்கு அளிக்கப் பண்டித நேரு அவர்கள் துணிவுகொள்ளவேண்டும். அத்தகைய நடவடிக்கையால், பண்டித நேரு அவர்களின நிலை இன்னும் பலமடங்கு உயரும் என்று உறுதி அளிக்க விரும்புகிறோம். ராஷ்டிரபதி பவனம், செங்கோட்டை ஆகியவைகள் புகழ் பெற்றவைகள் என்பது மட்டுமில்லாமல், பிரமாண்டமான அரசியல் அமைப்புகளாகத் திகழ்ந்திருக்கின்றன. புகழ்மிக்கதும், பிரமாண்டமானவைகளுமான இந்த அமைப்புகள் எழுப்பப்பட உதவிய ஒவ்வொரு கல்லும் சொல்லும் பாடத்தை பண்டித நேரு அவர்கள் சற்றுக்கவனிப்பாரானால், புதிய அரசியல் அமைப்பு ஒன்றை அமைப்பதில் தீவிரமாக ஈடுபடுவார். அத்தகைய அரசியல் அமைப்பில் நேசபாவம் கொண்ட நாடுகள் இணைந்திருக்கும்; ஆண்டான் அடிமை என்ற நிலை இருக்காது. பண்டித நேரு இதைச் செய்வாரா?...?...?

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

இவர்கள் தலையிடாதிருப்பது நன்று.

**நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு**

என்ற வள்ளுவர் வாய்மொழியை இவர்கள் உணர்ந்தடங்குவார்களாக!

இவ்விரு சாராருக்கும் இடையிலுள்ள உறவுநிலை குறிப்பிடத்தக்க அளவு முன்னேறவில்லை என்பதை மறைப்பதற்கில்லை.

இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையாளராகத் தம்மைக் கருதிக்கொண்டிருப்போர் இலக்கியப் பற்றுடன் இளைஞர் செய்யும் முயற்சிகளைப் போற்றுவதும் இல்லை. குறைகளை எடுத்துக்காட்டி திருந்தச் செய்வதுமில்லை. இவைவெல்லாம் ஆழமற்ற போலி முயற்சிகள் என்று புறக்கணித்துவிடுகின்றனர். புதிய முயற்சிகளையும் ஆர்வத்தையும் நன்னெறியில் போற்றிவளர்த்துத் தலைப்பட இவர்கள் தவறிவிடுகின்றனர். அதனால்தான் ஆக்ககரமான புது முயற்சிகளையும் சாதனைகளையும் போற்ற முன்வராத மனப்பான்மையை 'பண்டித மனப்பான்மை' என்று குறிப்பிடுகின்ற அளவுக்கு நிலைமை முற்றியுள்ளது.

இறுதியாக இக்கட்டுரையில் நாம் மனதிற்கொள்ள வேண்டியவை இலக்கியத்தில் புலமையும் பற்றும் ஒருங்கே வேண்டற்பாலன என்பதே.

ஒருவருக்குத் தன்னுடையமொழி இலக்கியத்தில் புலமை மட்டும் இருந்து பற்று இல்லாவிடினும், பற்று மட்டும் இருந்து புலமை இல்லாவிடினும் பயன் இல்லை.

---

கவிஞன் புயலைப்பற்றிக் கவிதை எழுதினால், அவன் புயலோடு புயலாய் ஓட்டிக்கொண்டிருப்பான்; அன்பை வர்ணித்தால் அவன் அன்புமயமாக ஆய்விடுவான்; அநீதியைத் தாக்கினால், அவன் உள்ளம் சீறி எழும்! கவிஞன் ஓர் ஆளையோ ஒரு பொருளையோ கேலி செய்தால் அது அவன் தன்னைத்தானே கேலிசெய்துகொண்ட மாதிரி இருக்கும். அதாவது கவிஞனின் உள்ளம் இரண்டறக் கலக்கும் உள்ளமாகும். அவன் கட்சி பேச முடியுமே ஒழிய சாட்சிசொல்ல முடியாது.